வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 16

படகோட்டி – மீனவ நண்பன்
ஓர் ஒப்பீடு

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 16

படகோட்டி - மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு

முனைவர் செ. இராஜேஸ்வரி **M. A., M. Phil., Ph. D.,**

சந்திரோதயம் பதிப்பகம்

3/472 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 16
நூலின் பெயர்	:	படகோட்டி - மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
துறை	:	எம்.ஜி.ஆர். சினிமாவும் அரசியலும்
அட்டை வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (நவம்பர் 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	144
விலை	:	Rs.200/-

- - - - -

Book	:	Vetrithirumagan MGR – 16
Title	:	Padagotti – Meenava Nanban oor Oppeedu [A comparative studyof fishermen film]
Author	:	Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Subject	:	MGR Cinema & Politics
Cover Design	:	C. Meenatchi
Publisher	:	Chandrothayam Pathippagam 3/472 First floor, Kambar 2nd Street Kambar Salai, Dinamani Nagar Madurai – 625 018 Phone : 7010997639
Month of Publish	:	November 2019
Pages	:	144
Price	:	Rs.200/-

அன்புக் காணிக்கை



இராஜாக்க மங்கலத்துறை என்ற ஊரைச் சேர்ந்த மீனவ சமுதாயத்தினரான 65 வயது *S.M.* பிரான்சிஸ் தன் ஆறு வயது முதல் தீவிர எம்.ஜி.ஆர். ரசிகர், பிரியர், பக்தர். அவர்களுக்கு இந் நூல் அன்புக் காணிக்கை.





அண்ணல் சைதையார் *அவர்களின்*
பொற்பாதங்களில் நன்றி மலர்களை
சமர்ப்பிக்கிறோம்!


TODAY
PLAZA
CROWN
BHUVANESWARI
SARAVANA
FILMS
PADAGOTTI
EASTMAN
T.PRAKASH
SPECIAL DEEPAVALI DAY MORNING SHOW AT 9-30 A.M

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women– Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று

பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy*

English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100" என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***
2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***
3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***
4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***
5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***
6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***
7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***
8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***
9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***
10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***
11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***

12. **இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,**

13. **முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்**

14. **இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.**

15. **எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]**

16. **படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு** ஆகியவை வெளிவந்துள்ளன.

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் **பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி** என்ற கவிதை நூல்களை இவர் முறையே"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You Language of Love, and A Lady at the little gate", என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.


தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்] ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி

அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் **'அமராவதியின் காதல்'** என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்குச் சென்றவை பற்றி எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய **"என்னோட ராசி நல்ல ராசி"** என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் **'மர வழிபாட்டின் வேர்களைத் தேடி (Deep into the roots of Tree worship), காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு'** போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

உள்ளடக்கம்

1.	*கதைகளின் நோக்கும் போக்கும்*	*1*
2.	*படகோட்டி மீனவ நண்பன் படங்களில் கதாபாத்திரப் படைப்பு*	*31*
3.	*படகோட்டி மீனவ நண்பன் படங்களில் உரையாடல் சிறப்பு*	*61*
4.	*படகோட்டி மீனவ நண்பன் பாடல்களின் ஒப்பீடு*	*99*


నేడే విడుదల
సరోజాదేవి. జయంతి
ఎం.జి. రామచంద్రన్
నాగేష్. నంబియార్..
నటించిన
ఈస్టిండియా ఫిలింకంపెని(ప్రై) లిమిటెడ్
సమర్పించు
సర్వజా ఫిలిమ్స్ వారి
కాలం మారింది
(ఈస్ట్‌మన్ కలర్)
దర్శకత్వం. టి. ప్రకాశరావు
ఈస్టిండియా రిలీజ్

1. கதைகளின் நோக்கும் போக்கும்

*மீனவர் வாழ்க்கையைப் பற்றி சங்க இலக்கியம் நெய்தல் திணை என்று தனியாக ஒரு திணை பிரித்து அதன் கருப்பொருளாக இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்று வரையறுத்துள்ளது. இரங்கல் என்பது பொதுவாக இறந்தவருக்கு அளிக்கப்படும் மரியாதையாகும்; கண்ணீர் அஞ்சலி ஆகும். கடலில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் உயிரோடு திரும்பி வருவது உறுதியற்றதாக இருப்பதனால் தரையில் இருக்கும் பெண்கள் ஆண்களை நினைத்து இரங்கி அழுவதாகவே பாடல்கள் அக்காலத்தில் இயற்றப்பட்டன. நெய்தல் நிலம் என்பது கடல் சார்ந்த பகுதியாகவும் கொள்ளப்பட்டது. சங்க இலக்கியத்தின் இரங்கல் போக்கு **21** ஆம் நூற்றாண்டை சேர்ந்த இன்றைய மீனவர் வாழ்விலும் மாறாமல் இருப்பதனை எம்.ஜி.ஆர். நடித்த படகோட்டி **(3.11.1964),** மீனவ நண்பன் **(14.08.1977)** ஆகிய படங்களில் காணலாம்.*

மீனவர் வாழ்க்கை

மீனவர்களின் வாழ்க்கை இரட்டை வாழ்க்கையாக அமைந்துள்ளது. கடலில் மீன் பிடித்து

கரையில் வந்து அவற்றை விலை கூறி விற்று வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்து குடும்பம் நடத்த வேண்டும். கடலிலும் தரையிலும் மாறிமாறி இயங்கும் மீனவர்களின் வாழ்க்கை உயிருக்கு உறுதியற்ற, பொருளாதார வளமற்ற வாழ்க்கையாகவே உள்ளது. மழை வரும் காலங்களிலும் புயல் வீசும் போதும் இவர்களுக்கு மீன்பாடு இருக்காது. மீனவர்களால் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல இயலாது. இக்காலகட்டங்களில் வட்டிக்குக் கடன் வாங்கி வாழ்க்கையை நடத்துவர்.




பின்பு மீன் பிடித்து வந்து கடனைத் திருப்பிச் செலுத்துவர். சொந்தப் படகு இருப்பவர்கள் ஓரளவு கடனை அடைக்க முடியும். படகும் வாடகைக்கு எடுத்து மீன் பிடிக்கச் செல்பவர்கள் கடனை அடைத்து நிம்மதியாக வாழ இயலாது. மீன் விலையும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருப்பதால் இவர்களின் துக்கம் தீராது. மின்சாரப் படகுகளை வைத்திருப்பவர்கள் இரட்டை மடி வலைகளை வீசி நிறைய மீன்களை அள்ளிக் கொண்டுவந்து ஏற்றுமதி செய்து விடுவர். மீனவர் தொழில் செய்யும் இவர்கள் ஏறத்தாழ பெருந்தனக்காரர்கள் அல்லது பெரிய அளவில் லாபகரமாக தொழில் செய்பவர்கள் ஆவர். ஆனால் சாமான்ய மீனவர்கள் அன்றாடம் அடிப்படைத் தேவைகளுக்கு அல்லாடும் நிலையே அன்று முதல் இன்று வரை நிலவுகிறது.



செம்மீன் கதை

தமிழில் படகோட்டி மீனவ நண்பன் படங்களைப் போல மலையாளத்தில் செம்மீன் என்ற படம் சத்யன், பிரேம் நசீர், ஷீலா ஆகியோர் நடித்து வெளிவந்தது. இப்படம் தகழி சங்கரன்பிள்ளை நாவலின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும். கடலில் செல்லும் மீனவன் உயிருடன் கரைக்குத் திரும்ப வேண்டுமென்றால் முக்குவனின் [மீனவன்] மனைவி கற்புநிலை பிறழாமல் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையை அடிப்படையாக கொண்ட கதை செம்மீன். ஆனால் தமிழில் வெளிவந்த



படகோட்டியும், மீனவ நண்பனும் இதுபோன்ற பத்தாம் பசலித்தனமான நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது அல்ல. இவை இரண்டும் மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான சிந்தனைகளை கொண்ட படமாகும். மீனவர்களின் பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமானவர்களை, அடையாளம் காட்டி அவர்களிடம் சிக்காமல் வாழும் முறையை உணர்த்திய படங்கள் ஆகும்.

படகோட்டியின் கதை

படகோட்டி படத்தில் இரண்டு மீனவ குப்பங்களைச் சேர்ந்தவர்களின் இடையிலான பகையும் தந்தையின் கட்டளைக்கு இசைந்து அப்பகையைத் தீர்த்து வைத்து இரண்டு குப்பத்தில் உள்ளவர்களையும் மாணிக்கம் [எம்.ஜி.ஆர்.] ஒன்று சேர்க்கும் ஒற்றுமை முயற்சியைக் காட்டும் படமாகும். இரு குப்பங்களின் தலைவர்களும் தங்களின் மக்களுக்காக எதையும் தியாகம் செய்யத்



தயாராக இருக்கும் நல்ல மனம் படைத்தவர்கள். திருக்கை மீன் குப்பத்தின் தலைவரின் மண்டையை சுறா மீண் குப்பத்தைச் சேர்ந்தவர்கள் உடைத்த பின்பும் அவர் தனது மகனிடம் [எம்.ஜி.ஆர்.] 'பழி உணர்ச்சி கூடாது ஒற்றுமையாக இணையவேண்டும். இதற்காக நீ உழைக்க வேண்டும். உன் உயிரே போனாலும் உழைக்க வேண்டும்' என்பார்.

சுறாமீன் குப்பத்தின் தலைவரும் தனது மக்கள் வெற்றுத்தாளில் கையெழுத்து போட்டுக் கொடுத்ததால் முதலாளி நீலமேகத்துக்குத் தன் மகளை அவளுடைய விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொடுத்து அந்தப் பத்திரங்களைத் திரும்ப பெறும் முயற்சிகளை மேற்கொள்வார். ஆக இரண்டு குப்பத்தின் தலைவர்களும் பொதுநலப் பண்பு உடையவர்கள்.

திருக்கை மீன் குப்பத்தின் இளம் தலைவரான எம்.ஜி.ஆர்., சுறா மீன் குப்பத்தின் தலைவர் மகளைக்



காதலித்துத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படும் போது, இவரது திருக்கை மீன் குப்பத்தைச் சேர்ந்தவர்கள் 'இந்த கல்யாணமும் இந்த காதலும் தப்பு' என்று சொல்லிவிடுவர். அதனால் தன் குப்பத்து மக்களுக்காகத் தன் காதலைத் தியாகம் செய்ய தலைவர் முன் வருவார். இவரது நற்பண்புகளுக்கு முன்பு முதலாளி நீல மேகத்தின் தீய குணங்கள் தோற்றுப்போகும். நிறைவாக இரண்டு மக்களும் இரண்டு ஊர்களும் ஒன்று சேர்ந்துவிடும்.

மீனவ நண்பனின் கதை

மீனவ நண்பன் படத்தின் கதை பணத்தைக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்று நினைக்கும் அகம்பாவம் பிடித்த ஒரு பணக்காரனின் தவறான எண்ணங்களை மாற்றுவதாக அமைந்திருக்கும். தாய் தகப்பன் இல்லாத குமரன் [எம்.ஜி.ஆர்.] ஒரு கடற்கரைப் பகுதிக்கு வந்து அங்கு பணக்காரன் ஒருவனால் மீனவர்களுக்கு நடக்கும் அநியாயங்களை எதிர்த்து அழிப்பார். பணத்தினால் எதையும் சாதிக்க இயலாது என்ற உயர் கருத்தை எடுத்துச் சொல்லும் கதை மீனவ நண்பனின் கதையாகும். இப்படம் மக்களின் அன்பே என்றும் நிலைத்து நிற்கும் என்பதை உணர்த்திய படம்

கதை ஒப்பீடு

மீனவ நண்பன் படத்தில் மீனவர்களின் ஒற்றுமை பாராட்டத்தக்கதாக அமையும். இக்கதை அண்ணா திமுக கட்சி ஆரம்பித்த பிறகு எழுதப்பட்ட கதை என்பதனால் மக்களின் ஆதரவு எம்.ஜி.ஆருக்குப் பரிபூரணமாக இருப்பதாகக்

காட்டப்படும். படகோட்டி காங்கிரஸ் காலத்தில் வெளிவந்த படம் என்பதாலும் அரசியல் நோக்குடன் எழுதப்பட்டது அல்ல. கதையின் போக்கு சற்று வித்தியாசமாக இருக்கும். நன்னு என்பவர் எழுதிய கதையின் திரை வடிவமே படகோட்டி.

இரண்டு படங்களும் எம்.ஜி.ஆர். சார்ந்திருக்கும் கட்சி ஆளுங்கட்சியாக இல்லாத சமயத்தில்



எடுக்கப்பட்டவை ஆகும். படகோட்டியில் எம்.ஜி.ஆரின் பேச்சை கேட்காமல் மீனவர்கள் நீலமேகத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகக் கதை அமைக்கப்பட்டது. ஆனால் மீனவ நண்பன் படம் வெளிவரும்போது எம்.ஜி.ஆர். அண்ணா திமுக கட்சி தலைவர் ஆகிவிட்டார். ஆனாலும் படம் எடுக்கும் போது அதிமுகவின் தலைவராக அவர் இருந்ததால் அவருடைய பேச்சுக்கு உள்ளூர் மக்களும் வெளியூர் மீனவர்களும் கட்டுப்படுகின்றனர்.

மீனவ நண்பன் கதையில் எம்.ஜி.ஆர். வாழும் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்குப் பதிலாக அவர்கள் இதுவரை பயன்படுத்திய படகுகளை எடுத்துக்கொண்டு கடலுக்குள் போக வெளியூர் ஆட்களை அழைத்து வருகின்றனர். அவ்வாறு அங்கு வந்த வெளியூர் மீனவர்களும் எம்.ஜி.ஆரின் பேச்சைக் கேட்டு மனம் மாறிவிடுவர். உழைப்பாளர்களின் ஒற்றுமை உயர வேண்டும் என்ற



எம்.ஜி.ஆரின் நோக்கத்திற்கு உடன்பட்டு அவர்கள் தமது ஊர்களுக்குத் திரும்பிச் செல்கின்றனர். படகுகளின் முதலாளி கூடுதலாகப் பணம் தருகிறேன் என்று சொல்லியும் கூட வெளியூர் மீனவர்கள் பணத்துக்கு ஆசைப்படாமல் எம்.ஜி.ஆரின் பேச்சுக்குக் கட்டுப்பட்டுத் திரும்பிவிட்டனர். இக் கதைப்போக்கு எம்.ஜி.ஆரின் திரையுலக மற்றும் அரசியல் செல்வாக்கின் உச்சத்தை உணர்த்துகிறது.

படகோட்டிகள் எம்.ஜி.ஆரின் குப்பத்து மீனவர்கள் எம்.ஜி.ஆருடைய காதலும் திருமணமும் கூடாது என்று சொல்கின்றனர். குப்பத்து மக்களால் எம்.ஜி.ஆரின் முயற்சிகள் அனைத்தையும் தவறான நோக்கில் அணுகி கேலி செய்யப்படுகிறது. அப்படத்தில் நடிக்கும் போது எம்.ஜி.ஆர். திமுக அனுதாபி மட்டுமே. அக்காலகட்டத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. அவர் திரையுலகில் உச்ச



நட்சத்திரமாக கோலோச்சினாலும் எழுதிய கதைப் படியே படம் எடுக்கப்பட்டது. இவருக்காக என்று தனியாகக் கதை எழுதப்படவில்லை.

மீனவ நண்பன் திரைக்கு வரும்போது எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆகிவிட்டார். மீனவ நண்பன் படத்தின் படப்பிடிப்பு நடக்கும் போதே தேர்தல் பிரச்சாரங்களில் மக்களுடைய செல்வாக்கைக் கண்டு அடுத்த முதலமைச்சர் அவர்தான் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனவே இப்படம் வெளிவந்தபோது வெற்றிப் படமாக அமைந்தது.

மீனவ நண்பன் படப்பிடிப்பு

எம்.ஜி.ஆர். கலந்து கொண்ட கடைசி படப்பிடிப்பு மீனவ நண்பன் கிளைமாக்ஸ் காட்சியாகும். அவருடைய கால்ஷீட் கிடைக்காத காரணத்தினால் ஸ்டூடியோவிலேயே வைத்து இக்காட்சியை எடுத்துவிட்டனர். வெளிப்புறப் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர். கலந்து கொள்ள நேரமில்லாத காரணத்தால் அவசரம் அவசரமாக இப்படப்பிடிப்பு நிகழ்த்தப்பட்டது. அப்போது தேர்தல் முடிவுகள் வெளியாகி அரசு அமைப்பதும் உறுதியாகிவிட்டது. மீனவ நண்பனில் சில காட்சிகள் எடுக்க வேண்டும் என்பதற்காக எம்.ஜி.ஆர். தான் முதலமைச்சராகப் பதவி ஏற்கும் நாளை ஒத்தி வைத்துவிட்டு மீனவ நண்பன் படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.

மீனவ நண்பன் படப்பிடிப்பு முடிந்ததும். எம்.ஜி.ஆர். படப்பிடிப்புத் தளத்தின் தரையைத் தொட்டு வணங்கினார். தன்னுடன் நடித்த லதாவுக்கு



133 மீனவநண்பன் இயக்குனர் : சி.வி.ஸ்ரீதர்

'ஆயிரத்தில் ஒருவன்' படத்திற்குப் பின் கர்நாடக கடலோரப் பகுதிகளில் படமாக்கப்பட்ட, ஸ்ரீதர் இயக்கத்தில் எம்.ஜி.ஆர். மீனவராக நடித்த படம். இந்தப் படத்தின் படப்பிடிப்பு நேரத்தில்தான் எம்.ஜி.ஆர்., மூகாம்பிகை கோவிலுக்கு சென்று அம்மனை வழிபட்டு வந்தார்.

வெளியான தேதி, ஆண்டு : 14.08.1977

‘என்னோடு நடித்ததற்கு நன்றி மா’ என நன்றி தெரிவித்தார். அப்போது அங்கிருந்தவர்களைப் பார்த்து ‘முதல் படத்தில் என்னுடன் நடித்தவர் ராஜாவின் மனைவி; இந்த படத்தில் என்னுடன் நடித்திருப்பவர் ராமநாதபுரம் ராஜாவின் மகள் லதா. இதுவரை திரையுலகில் ராஜாவாக ஏன் சக்கரவர்த்தியாகவே இருந்துவிட்டேன் இப்போது அரசியலில் மந்திரியாக தான் போகப் போகிறேன். அரசியலை விட நான் திரையுலகை மிகவும் மதிக்கிறேன். நான் மீண்டும் திரும்பி வருவேன்’’ என்று சொல்லி அனைவரிடமும் கைகுலுக்கி கைகூப்பி வணங்கி விடைபெற்றுச் சென்றார். இதுவே அவர் கலந்து கொண்ட கடைசி படப்பிடிப்பு ஆகும்.

*எம்.ஜி.ஆர். முதலமைச்சரானதும் மீண்டும் படங்களில் நடிக்கப் போவதாக அறிவித்தார். அதற்கு பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களும் அனுமதி வழங்கினார். இச்செய்தியை பகலில் மீட்டிங் இரவில் சூட்டிங் என்று நாளிதழ்கள் வெளியிட்டன. இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி பெரிய அளவில் எதிர்ப்பு தெரிவித்தார். எம்.ஜி.ஆருடைய நற்பண்புகளைக் கேள்விப்பட்ட பிரதமர் மொரார்ஜி தேசாய் அனுமதி வழங்கியதும் கருணாநிதி அமைதியாகிவிட்டார். **1979** ஆம் ஆண்டு அண்ணா திமுக அரசு கவிழ்க்கப்பட்டது. அப்போது மீண்டும் எம்.ஜி.ஆர். சில படங்களில் நடிக்க முயற்சி எடுத்தார். மீண்டும் சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதால் அவரால் படங்களை முடித்துக் கொடுக்க இயலவில்லை. இவ்வாறு சுமார் பதினான்கு படங்கள் நின்றுபோயின. நடிக்க இயலாமல் போயிற்று.*

கதைக்கட்டமைப்பு வகைகள்

ஆங்கிலத் திறனாய்வாளர்கள் கதை கட்டமைப்பை ***[structure]*** *ஏழு வகையாகப் பிரிக்கின்றனர். அவற்றில் முதல் மூன்று நம்முடைய கதைகளுக்கு பொருந்தி வருவனவாகும். அவை* ***1. Overcoming the Monster, 2. Rags to riches 3. The quest*** *ஆகியனவாகும்.* ***Overcoming the Monster*** *என்பது அசுரனைக் கொல்லும் கதை. அதாவது மனித சக்திக்கு அப்பாற்பட்ட மனிதனால் எதிர்த்து நிற்க இயலாத அசுரத் தன்மை உடையவனை ஒரு மாவீரன் வெல்லும் கதையாகும். படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரண்டு கதைகளிலும் மனித உயிர்களின் மீது இரக்கம் காட்டாத பணக்காரனே அரக்கனாக, அசுரனாக நமக்குத் தோன்றுகிறான். இரண்டு படங்களிலும் வில்லனாக நடித்திருப்பவர் நம்பியார். அவரையே இங்கு அசுரனாக நாம் கொள்ள வேண்டும் ஏழை மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி இங்கு அசுரத் தன்மையை குறிக்கும்.*



படகோட்டி படத்தில் இரண்டு குப்பத்தாருக்கும் கடன் கொடுத்து அவர்களை நிரந்தர அடிமைகளாக்கி விடுவது உழைப்புக்கு உரிய ஊதியத்தை வழங்காமல் பொருளாதாரச் சுரண்டலில் ஈடுபடுவது ஆகியன இருபதாம் நூற்றாண்டின் அசுரத் தன்மைகள் ஆகும். இருபதாம் நூற்றாண்டுக்கு உரிய அசுரத்தனமான செயல்களில் ஈடுபட்டவர் இவ்விரு படங்களிலும் நம்பியார். மனிதாபிமானமற்ற கொடிய குணங்களைக் கொண்ட இவரை என்றும் ஏழைகளிடம் இரக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமே தவிர அவர்களின் உழைப்பைச் சுரண்டுவது ஆகாது என்ற நற்பண்பை உணர்த்தி அவரைத் திருத்தும் எம்.ஜி.ஆர். அசுரனை வென்ற குமரன் ஆவார்.

ஏழ்மையிலிருந்து பணக்கார நிலை

Rags to riches *என்ற நோக்குடன் கதை கட்டமைப்புக் கொண்டவை என்ற வகையிலும் இரண்டு படத்தின் கதைகளும் அமைந்துள்ளன.*



ஏழைகள் தங்கள் உழைப்புக்கேற்றபடி பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைகின்றனர் என்ற படத்தின் முடிவு ஏழை மீனவர்கள் தமது ஏழ்மை நிலையில் இருந்து இனி விடுபட்டு பணக்கார நிலையை அடைவது உறுதி என்ற நம்பிக்கையை படம் பார்ப்பவருக்கு உணர்த்துகிறது.

படகோட்டி மீனவ நண்பன் ஆகிய இரண்டு படங்களின் கதைக் கட்டமைப்பும் ஏழ்மையில் இருந்து பணக்கார நிலை அடைய வேண்டும் என்ற நோக்குடன் உருவாக்கப்பட்டவை ஆகும். மீனவர்கள் தம் எம்.ஜி.ஆர். உயிரை பணயம் வைத்து கடலுக்கு போறீங்களே அதற்கு உண்டான பலன் கிடைக்கிறதா உங்களுக்கு என எம்.ஜி.ஆர். ராமதாஸ் முன்னிலையில் சுறா மீன் குப்பத்து மக்களிடம் பேசுவது அவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கி அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகும்.



படகோட்டி படத்தின் முதல் பாட்டு மீனவர்களின் வாழ்க்கை ஏழ்மையும் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலையும் கொண்டிருப்பதனைத் தெளிவாக விளக்குகிறது.

*“**தரை மேல் பிறக்க வைத்தான் எங்களைத்***

தண்ணீரில் பிழைக்க வைத்தான்

கரை மேல் பிறக்க வைத்தான்** – **பெண்களை

***கண்ணீரில் இருக்க வைத்தான்**”*

என்ற பாடல் அவர்களின் ஏழ்மையை சுட்டுகின்றது.

மீனவ நண்பன் கதையிலும் பசியோடு வேலை செய்யும் ஒருவன் பணிச்சுமை தாளாமல் இறந்து போவதாக கதை தொடக்கத்தில் காட்டப்படுகிறது. இக்காட்சி

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு

வாழும் மனிதருக்கெல்லாம்”

என்ற பாரதியின் வரிகளை நினைவூட்டுகிறது.



இவரது வரிகள் படத்தில் பின்னர் வரும் நேருக்கு நேராய் வரட்டும் எனத் தொடங்கும் பாட்டில்

> ***“தனியொருவனுக்கு உணவில்லை என்றால்***
>
> ***ஜெகத்தினை அழித்திடுவோம் என்று***
>
> ***தமிழ் கவி பாரதி பாடிய பாட்டை***
>
> ***நடைமுறையாக்கிடுவோம்”***

என இடம்பெற்றுள்ளன. இவ்வரிகள் மீனவர்களின் நிலை பரிதாபமாக இருப்பதை உணர்த்துகிறது. ஆனால் இறுதியில் அவர்களுக்கு மின்சார படகு கிடைப்பதனால் சந்தோஷமாக மீன் பிடித்து வந்து தாங்கள் விரும்பிய தாங்கள் நிர்ணயித்த விலைக்கு மீனை விற்று மகிழ்ச்சியோடு வாழலாம் என்பதையும் குறிக்கிறது. இதனால் படத்தின் முடிவில் அனைவரும் ஆடிப் பாடுகின்றனர்.

தேடல்

தேடல் என்ற முன்றாவது கட்டமைப்பு அம்சம் ஆன்மீகத்தேடல் பொருள் தேடல், அனுபவத் தேடல், அறிவுத் தேடல் என பலவகை தேடுதளாகக் கதைகளில் இடம்பெறும். அவற்றில் படகோட்டி, மீனவ நண்பன் ஆகியவை மீனவர்களின் வாழ்வில் இருந்து வந்த சோகத்தை தீர்ப்பதற்கான எம்.ஜி.ஆரின் தீர்வு தேடுதல் முயற்சி பற்றியதாகும்.

படகோட்டியில் எம்.ஜி.ஆர். நீலமேகத்திடமே மீன்களை விற்காமல், அவரிடம் இருந்து விலகி புதிய முதலாளியிடம் மீன்களை விற்க முயற்சி செய்வார். இந்த முயற்சி பலன் அளிக்காததால் அரசாங்கத்திடம் மனு கொடுத்து படகு வாங்க



முயற்சிகள் மேற்கொள்வார். இதற்காக இரண்டு குப்பங்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியிலும் ஈடுபடுவார். இவ்வாறு ஏழ்மை தீர்வதற்கான புதிய புதிய வழிமுறைகளைத் தேடிச் செல்வார். ஆனால் இம்முயற்சிகள் அனைத்தும் ஆரம்பத்தில் பலன் அளிக்காவிட்டாலும் இறுதியில் நல்ல பலனைத் தரும்.

கதையின் படி நிலைகள்

*இலக்கிய விமர்சகர்கள் ஒரு கதை என்பது ஐந்து படிநிலைகளை கொண்டதாக இருக்கவேண்டும் என்று வரையறுத்துள்ளனர். அவையாவன் **1.**கதையின் தொடக்கம் **2.** வளர்ச்சி, **3.** உச்சகட்டம் **4.** வீழ்ச்சி **5.** முடிவு என ஐந்து படிநிலைகளை ஒவ்வொரு கதையும் கொண்டிருக்க வேண்டும். படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரண்டிலும் கதையின் படிநிலைகளை ஒப்பிடும்போது இந்த*

ஐந்து படிநிலைகளும் இவற்றில் தெளிவாக இடம்பெற்றுள்ளன.

1. **தொடக்க நிலை**

படகோட்டி, மீனவ நண்பன் ஆகியவற்றில் ஆரம்பக் காட்சியிலேயே மீனவர்களின் பசிக் கொடுமை காட்டப்படுகிறது. மனோரமா தனக்கு கொண்டுவந்த உணவை 'நீ பழனி வீட்டில் கொண்டு போய் கொடு. அங்கு குழந்தைகள் பசியால் துடிக்கிறார்கள். அவர்களுக்கு கொண்டுபோய் கொடு' என்பார். மீனவ நண்பன் படத்தில் நம்பியாரின் பங்களாவில் சோறு சாப்பிடக் கூட நேரம் தராமல் வேலையை முடித்துவிட்டுத்தான் சாப்பிடவேண்டும் என்று காலையிலிருந்து பசியோடு ஒருவனை உச்சிப் பொழுது வரைக்கும் வேலை வாங்கியதால் அவன் மயங்கி விடுகிறான். தண்ணீர் குடிக்க மட்டும் அனுமதி பெற்று விட்டு



வரும்போது வழியாக பங்களாவுக்குள் இருக்கும் ரொட்டிகளைப் பார்த்து அவற்றை எடுத்து தன் துண்டில் ஒளித்து வைக்கிறான். சமையல்காரர்கள் பார்த்து முதலாளியிடம் சொல்லவும் அவனை மாரியிடம் சொல்லி அடித்து துவைத்து வெளியே தள்ளுகின்றனர். இரண்டு படத்திலும் இரண்டு கதையிலும் ஏழை மீனவனின் பசிக் கொடுமை தொடக்கமாக அமைகின்றது.

2. ***வளர்ச்சி நிலை***

இரண்டாவது கட்டமான வளர்ச்சி என்பது பசி கொடுமை தாளாமல் உயிரை பணையம் வைத்து உழைத்தும் அந்த உழைப்பிற்கு உரிய ஊதியம் கிடைக்காமல் வறுமையில் வாடும் மீனவர்களுக்காக கதையின் நாயகனாகிய எம்.ஜி.ஆர். முதலாளிகளை எதிர்த்து நிற்கும் காட்சிகள் ஆகும். எம்.ஜி.ஆரின் முயற்சிகள் அடுத்தடுத்து கதை நிகழ்ச்சிகள் அடுக்கப் படுகின்றன.

3. ***உச்சகட்டம்***

இரு தரப்பினறுக்கும் இடையிலான முரண்பாடுகள் உச்சக் கட்டத்தைத் தொடுவதே மோதல் ஆகும். புராணக் கதைகளில் நடைபெறும் போர்கள் உச்சக் கட்டம் ஆகும். திரைப்படத்தில் கிளைமேக்ஸ் என்பதும் காட்சி உச்சக் கட்டம் எனப்படும். கதாநாயகனுக்கும் தீயவனான வில்லனுக்கும் நேரடியாக ஏற்படும் மோதல் இது. இம்மோதல் காட்சி படகோட்டியில் குடோனில் எம்.ஜி.ஆருக்கும் நம்பியாருக்கும் இடையிலான சண்டை காட்சியாக எடுக்கப்பட்டுள்ளது. மீன்விழி [ஜெயந்தி] சுறா மீன் குப்பத்தினர் கையெழுத்து

மட்டுமே போட்டுத் தந்த வெற்று பத்திரங்களை சரோஜாதேவியிடம் கொடுக்கிறார். அவர் அவற்றை எம்.ஜி.ஆரிடம் கொண்டு போய் கொடுக்கிறார். சரோஜாதேவியை விரட்டிக் கொண்டு வந்த நம்பியார் எம்.ஜி.ஆரைத் துப்பாக்கியால் சுட்டு கொல்ல முடிவு செய்கிறார். இதுவே உச்சக் கட்டம் ஆகும்.

மீனவ நண்பன் படத்தில் உச்சக் கட்டக் காட்சி எடுக்க காலம் போதாமையால் படகு விரட்டும் காட்சியாக எடுத்துவிட்டனர். நம்பியாரை எம்.ஜி.ஆர். விரட்டி சென்று பிடித்து வந்து போலீசில் ஒப்படைப்பார். மீனவ நண்பன் படத்தில் உச்சகட்ட காட்சி படகோட்டி அளவுக்கு பரபரப்பாக எடுக்கப்படவில்லை. அப்போது மத்திய அரசு நெருக்கடி நிலையை பிரகடனம் செய்து இருந்தது. அதனால் திரைப்படங்களில் இடம்பெறும் சண்டைக் காட்சிகளை வன்முறையைத் தூண்டும் காட்சிகள் எனச் சொல்லி தணிக்கை குழுவினர் அவற்றை நீக்கி விடுவது



உண்டு. எனவே மீனவ நண்பன் படத்தில் எம்.ஜி.ஆர். உச்சகட்ட காட்சியை படகு துரத்தும் காட்சியாக மாற்றிவிட்டார். நம்பியாரும் இவரும் நேருக்கு நேர் சண்டை இடுவதாக உச்சகட்ட காட்சியை அமைக்கவில்லை. நம்பியார் ஒரு படகில் தப்பிச் செல்வதாகவும் அவரை இன்னொரு படகில் எம்.ஜி.ஆர். விரட்டி பிடிப்பதாகவும் போட் சேஸிங் முறையில் ஆங்கிலப் படத்தைப் போல இக்காட்சி எடுக்கப்பட்டது. இரசிகர்கள் பெரிதும் ரசித்தனர். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் படகு துரத்தும் காட்சிகள் ஹாங்காங்கில் எடுக்கப்பட்டன. மீனவ நண்பனில் ஸ்டுடியோவுக்குள் மினியேச்சர் படகுகளைக் கொண்டு பெருமளவு உச்சக் கட்டக் காட்சிகள் எடுத்து முடிக்கப்பட்டன.

படகோட்டி படத்தில் ஆரம்ப காட்சியில் விறுவிறுப்பான சிலம்புச்சண்டை இடம் பெற்றது. மீனவ நண்பனில் எம்.ஜி.ஆருக்கும் நம்பியாருக்கும் வாள் சண்டை இடம் பெற்றது. லதாவை திருமணம் செய்வதற்கு தகுதியாக எம்.ஜி.ஆர். வாள் சண்டையில் வெற்றிபெற வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. இந்நிபந்தனை அந்த காலகட்டத்துக்கு பொருந்தாததாக இருந்தாலும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக இச்சண்டைக் காட்சி வைக்கப்பட்டது. அறுபது வயதைக்கடந்த எம்.ஜி.ஆரும் நம்பியாரும் இச்சண்டைக் காட்சியில் அருமையாக நடித்து ரசிகர்களின் கைத்தட்டலை பெற்றனர்.

*4. **வீழ்ச்சி***

இரண்டு கதைகளிலும் வில்லனின் தோல்வி வீழ்ச்சியாகக் காட்டப்பட்டது. வில்லனாகிய

நம்பியார் திருந்தி வருந்துவதாகவும் சட்டத்தின் கையில் ஒப்படைக்கப் படுவதாகவும் படங்களின் இறுதி காட்சிகள் அமைந்தன.

5. **முடிவு**

இது இரண்டு எம்.ஜி.ஆர். படங்களிலும் வழக்கம் போல சுபமான முடிவு அமைந்தது. சுப முடிவு படம் பார்ப்பவர்களுக்கு எம்.ஜி.ஆர். மீது மிகுந்த நம்பிக்கையை உருவாக்கியது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையையும் அளித்தது. படங்களில் மீனவர்களின் துன்பம் தீர்ந்தது.

படகோட்டி படத்தில் இரண்டு குப்பத்தை சேர்ந்தவர்களும் ஒற்றுமைப்பட்டு அரசின் அனைத்து நன்மைகளைப் பெற வழிவகை செய்யப்பட்டது மீனவ நண்பன் படத்தில் மீனவர்களுக்கு அரசு மின்சார படகு ஒன்றை அளித்தது. அவர்கள் பணக்கார முதலாளியின்



படகுகளை இனி வாடகைக்கு எடுத்துச் செல்லாமல் சொந்தப் படகில் போய் மீன் பிடித்து வரலாம். எனவே அனைவரும் ஆடிப்பாடும் காட்சியுடன் படம் நிறைவு பெற்றது.

கதையின் உறுப்புக்கள்

ஒரு கதை என்பது பல உறுப்புகளை அல்லது மூலகங்களை கொண்டதாகும். ஒரு மனிதனுக்கு பல்வேறு பணிகளுக்கான பல்வேறு அங்கங்கள் அல்லது உறுப்புகள் இருப்பது போல கதைக்கும் பல உறுப்புக்கள் உண்டு. பொதுவாக ஒரு கதையில் ஏழு உறுப்புகள் உண்டு சில கதைகளில் ஒன்று கூடவோ குறையவோ செய்யலாம்,

1. *கதைச் சிக்கல்*

2. *கதா பாத்திரம்*

3. *தீர்மானம்*

4. *கதைக்களம்*

5. *கதை சொல்லும் பாணி*

6. *கதைக்கரு*

7. நோக்குநிலை

ஆகிய ஏழும் ஒரு கதையின் இன்றியமையா உறுப்புகளாகும்

1. கதை சிக்கல் *என்பது பிளாட்* ***[plot]*** *என ஆங்கிலத்தில் அழைக்கப்படும். படகோட்டி மீனவ நண்பன் இரண்டிலும் ஏழைக்கும் பணக்காரனுக்கும்*

இடையில் நடக்கும் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிரான மோதல் தான் கதை சிக்கல் எனப்படும்.

2. ***கதாபாத்திரம்*** *என்பது கதை சிக்கல் அல்லது நோக்கத்தை நிறைவேற்ற உதவும் மனிதர்களை குறிக்கும். படகோட்டியிலும் மீனவ நண்பனிலும் மீனவர்கள் நல்லவர்கள் ஆகவும் வில்லன் நம்பியாரும் அவனது அடியாட்களும் தீயவர்களாக இருந்தனர்.*



3. ***முடிவெடுத்தல் அல்லது தீர்மானம்*** *எனப்படுவது கதாபாத்திரங்கள் எடுக்கும் முடிவால் கதையில் திருப்பம் ஏற்படுவதை குறிக்கிறது. கெட்டவர்களிடமிருந்து எளியவர்கள் பெற வேண்டிய பொருளாதார விடுதலையே கதையின் கருவாகும். இதற்கு நம்பியார் சரோஜாதேவியைத் திருமணம் செய்துகொள்ள எடுக்கும் முடிவு பெரிய இடையுறாக மாறியது. மீனவ நண்பனில் நம்பியார் கோயில் சிலைக்கு அடியில் இருக்கும் கருப்பு பணத்தை திருடிச் செல்ல முடிவெடுத்தது ஏழைகளின் சொத்தை மொத்தமாக அபகரிக்கும் திருப்புமுனையாக அமைந்துவிட்டது.*

4. ***கதைக்களம்*** *என்பது மீனவர் வாழும் கடற்கரை பகுதியை நில எல்லையாகக் குறிக்கிறது. எளியவர்களின் குப்பம் குடிசைகள் கெட்டவனின் பங்களா, கடற்கரை பகுதி, தோப்பு ஆகியன கதை நிகழும் களமாக அமைந்துள்ளது.*


5. ***கதை சொல்லும் பாணி அல்லது ஸ்டைல்*** *என்பது இலட்சியவாதி வெல்வான் என்ற வகையில் நீதி கதைகள் சொல்லும் முறையில் அமைந்துள்ளது. கதையின் முடிவில் நல்லவன் வாழ்வான் தீயவன் அழிவான் என்ற நற்செய்தி சொல்லப்படுகிறது. இக்கதைகள் இரண்டும் ஃப்ளாஷ்பேக் உத்திகள் எதுவும் இல்லாமல் காலவரிசைப்படி நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. மேலும் எதார்த்த போக்கில் அவர்களின் துன்பம் தொடர்ந்தாலும் கூட எம்.ஜி.ஆர். சார்ந்திருக்கும் கட்சியை ஆதரித்தால் அவர்களின் துயர் அமைக்கப்படும் என்ற ஊடு தகவலையும் படக்கதைகள் எனக்கு உணர்த்துகின்றன. அவ்வகையில் எம்.ஜி.ஆர்.*

சார்ந்திருந்த கட்சிகளுக்கு முழு ஆதரவு அளித்தனர். கதை சொல்லும் பாணி அளித்த நம்பிக்கை எம்.ஜி.ஆருக்கு அரசியலில் மிகப்பெரிய வெற்றியை அளித்தது.

***6. கதைக்கரு** [THEME] எனப்படுவது இவ்விரு கதைகளிலும் ஏழை எளிய மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஊட்டுவதாகும். ஏழ்மையும் இல்லாமையும் அவரவர் தலையெழுத்தால் ஏற்பட்டது அல்ல நாம் போதிய விபரம் தெரியாமல் பொருளாதாரச் சுரண்டலுக்கு இடம் கொடுப்பதால் உருவானதே ஆகும் என்ற பகுத்தறிவு சார்ந்த கருத்தை பார்வையாளர்கள் அறியச் செய்வது கதையின் கருவாகும்.*

நிறைவு

படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரண்டு கதைகளும் ஒரே நோக்கிலும் போக்கிலும்



எடுக்கப்பட்டிருந்தாலும் படகோட்டி கதை அடுத்தடுத்த நிகழ்ச்சிகள் ஒன்றோடு ஒன்று இணைத்து கோர்க்கப்பட்டதாக அமைந்துள்ளது. ஆனால் மீனவ நண்பனில் கதை நிகழ்ச்சிகளின் கோர்வையாக அமையாமல் தனித்தனியாக உள்ளன. படகோட்டியில் கதையில் எம்.ஜி.ஆர். எடுக்கும் முயற்சிகள் ஒவ்வொன்றும் முதலில் தோல்வியைத் தழுவுகிறது. பின்னர் அவர் முதியவர் வேடம் போட்டு எதிரியின் வீட்டில் போய் தங்கி இருந்து அவர்களுக்கு சார்பாக நடந்து கொண்டு இருதரப்பினரையும் இணைக்கும் முயற்சியில் வெற்றி பெறுகிறார்.

மீனவ நண்பன் படத்தில் பணத்தைக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்று நினைக்கும் நம்பியார் தன் மாமனாருக்கு தெரியாமல் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டபடி ஏழை மீனவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்கி போலீசாரின் கண்ணில் மண்ணைத் தூவி நல்லவர்களை ஏமாற்ற முயல்வது மனிதனின் துர்குணங்கள் தொடர்ச்சியாகவே அமைகிறது. படகுகளை தொடக்கூடாது என்று நம்பியார் சொன்னதும் எம்.ஜி.ஆர். அனைத்து மீனவர்களுக்கும் பொதுவில் உணவு சமைத்து பரிமாறுவதும் பின்பு அவர்களை மரம் வெட்டும் தொழிலில் ஈடுபடுத்துவதும் என வாழ்வாதாரத்திற்கு வழிகளை அமைத்து தருகின்றார்.

இரண்டு கதைகளிலும் கூட்டு முயற்சிகள் காணப்படவில்லை. எம்.ஜி.ஆர். மட்டுமே செயல் வீரர் என்று காட்ட வேண்டியை நிலை இருப்பதால் தனியொருவனின் நீடித்த முயற்சியாகவே அமைகின்றன. மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த

எம்.ஜி.ஆர். என்ற தனிநபர் எடுக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கதை எம்.ஜி.ஆர். என்ற தனிநபரின் செல்வாக்கை உயர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட கதையாகும்.

படகோட்டி கதை ஒரு நல்லவனின் கதை. இக்கதையில் மீனவ நண்பனில் காட்டியதைப் போன்று அளவு கடந்த ஹீரோயிசம் கிடையாது. ஆனால் மீனவ நண்பனில் எம்.ஜி.ஆரின் குடும்பப் பின்னணியோ பொருளாதார வசதியோ சுட்டப்படவில்லை. யாரோ ஒரு தனி மனிதன் மீனவர்களின் வாழ்க்கையை தனியாகப் பாடுபட்டு உயர்த்துவது என்பது நம்புவதற்கு அரிதான கதையாகும். கதையில் எம்.ஜி.ஆர். நடித்திருப்பதால் அவர் படித்தவரா வசதி படைத்தவரா அதிகாரம் செல்வாக்கு உடையவரா என்ற கேள்விகள் எதுவும் இல்லாமல் அவரால் மக்களுக்கு நல்ல மாற்றங்களை கொண்டுவர முடியும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

மீனவ நண்பன் சாதனைகள்
படம் வெளியான நாள் : 14-08-1977

சென்னை தேவிபாரடைஸ்	– 103 நாட்கள்
அகஸ்தியா	– 88 நாட்கள்
மதுரை சிந்தாமணி	– 117 நாட்கள்
அப்சரா	– 103 நாட்கள்
இலங்கை யாழ்நகர் ஸ்ரீதர்	– 105 நாட்கள்

2. படகோட்டி மீனவ நண்பன் படங்களில் கதாபாத்திரப் படைப்பு

படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரு படங்களிலும் தலைமைக் கதாபாத்திரமாக எம்.ஜி.ஆர். மாணிக்கம், குமரன் என்ற பெயரில் நடித்துள்ளார். அவருக்கு இணையாக படகோட்டியில் சரோஜாதேவியும், மீனவ நண்பனில் லதாவும் நடித்துள்ளனர். இரண்டு படங்களிலும் வில்லனாக நடித்திருப்பவர் நம்பியார். இரண்டிலும் காமெடி வேடத்தில் வருபவர் நாகேஷ். படகோட்டியில் அவருடன் வீரய்யா நடித்திருக்க, ஏ. எல். நாராயணன் நகைச்சுவை வசனங்களை எழுதியிருந்தார்.

மீனவ நண்பன் படத்தில் நாகேஷ் உடன் அவர் தந்தையாக தேங்காய் சீனிவாசன் நடித்திருந்தார். படகோட்டியில் நாகேஷுக்கு ஜோடியாக மனோரமாவும், மீனவ நண்பனில் நாகேஷின் தந்தையான சீனிவாசனை திருமணம் செய்யும் பெண்ணாக சச்சுவும் நடித்திருந்தனர். படகோட்டியில் வில்லன் நம்பியாருக்கு கையாளாக அசோகன் நடித்திருந்தார். மீனவன் நண்பனில் கே கண்ணன் அடியாள் பாத்திரத்தைச் செய்திருந்தார். மீனவ நண்பனில் மூன்று வில்லன்கள். படத்தில் நம்பியாரின்

தந்தையாக நடித்த பி எஸ் வீரப்பா கள்ளக் கடத்தலில் ஈடுபட்டு வந்தார். நம்பியாரின் மாமனாரான வி கே ராமசாமிக்கு தன் சம்பந்தி மற்றும் மருமகனின் திருட்டு விவகாரங்கள் தெரியாது. ஆனால் வி கே ராமசாமி அளவற்ற கருப்பு பணம் பதுக்கி வைத்திருந்தார் தங்கக்கட்டியாக மாற்றி அவற்றைக் கோயிலில் அம்மன் பீடத்திற்கு கீழே மறைத்து வைத்து இருந்தார். இதனை படத்தின் பின்பகுதியில் நம்பியார் அபகரித்துக் கொண்டு செல்வார். பிறகு போலீசாரிடம் எம்.ஜி.ஆர். இவரை பிடித்துக்



கொடுப்பார். சிறைத்தண்டனை பெற்று அங்கு மனம் திருந்துவார்.

ஒரு கதையில் அல்லது ஒரு படத்தில் கதாபாத்திரப் படைப்பு என்பது பொருத்தமாகவும் செம்மையாகவும் அமைய வேண்டும். கதாபாத்திரங்களே கதையை எடுத்துச் செல்லும் பொறுப்பு உடையவர்கள். ஒரு கதாபாத்திரத்தை அதனுடைய அறிமுகக் காட்சியிலேயே அதன் பண்புகள் மூலமாக படத்தில் அதனுடைய முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். சில கதாபாத்திரங்கள் கதையின் முக்கால்வாசி வரை முக்கியமில்லாதவர் போல காட்டப்பட்டு பின்பு கதையின் திருப்பு முனைக்கு வழிவகுக்கும் அல்லது கதையின் முடிவில் அவர் தான் கொலை செய்தவராகவோ, கொள்ளையடித்தவராகவோ நல்லவர் போல் வேடமிட்ட கெட்டவராகவோ (பறக்கும் பாவை படத்தில் காஞ்சனா) காண்பிக்கப்படுவதும் உண்டு. பொதுவாக பாத்திரத்தின் அறிமுகக் காட்சியில் அவரது தோற்றம், வசனம், செயல்பாடு ஆகிய வழிகளில் அவரது இன்றியமையாமை காட்டப்படும். அவ்வாறு இருப்பது சிறப்பான கதாபாத்திர அமைப்பாகவும் விளங்கும்.

எம்.ஜி.ஆர்.ரின் அறிமுகக் காட்சி

படகோட்டியில் எம்.ஜி.ஆர். அறிமுகமாகும் போது தன் தந்தையின் மண்டையை உடைத்த எதிர் குப்பத்தின் ஆட்களை எதிர்க்கும் ஒரு வீரனாக வருவார். இவர் தன்னுடைய ஒரு கம்பை கொண்டு எதிரிகளின் ஐந்து கம்புகளை தடுத்து நிறுத்துவார். இக்காட்சி அவரது துணிச்சலை



பிரதிபலிக்கும். மேலும் இவர் உடுத்தியிருக்கும் கருப்பு சிவப்பு ஆடை அவருடைய அரசியல் பின்புலத்தை எடுத்த எடுப்பிலேயே உணர்த்துகின்றது. எம்.ஜி.ஆர். தன் படங்களில் முக்கிய காட்சிகளில் வீரம் அல்லது சமூக மாற்றம் உணர்த்தப்படும் காட்சிகளில் கருப்பு சிவப்பு உடை தரித்து திமுகவின் பிரதிநிதியாக தன்னைக் காட்டிக் கொள்வது வழக்கம். அதுபோல படகோட்டியிலும் அவர் கருப்பு சிவப்பு உடையுடன் வந்து முதல் காட்சியில் கெட்டவர்களுடன் சண்டை போட்டு அவர்களை ஓட ஓட விரட்டுவார்.

மீனவ நண்பனில் அவருடைய வீரத்தை விட அவருடைய இரக்ககுணம் அதிகம் புலப்படும் வகையில் அறிமுகக் காட்சி அமைந்திருக்கும். உணவு திருடிய ஒருவனை அடித்து வெளியே தள்ளிய போது அவனைத் தாங்கிப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் அவனுக்குப் பசியாற உணவு

வழங்கவேண்டும் என்று அந்த வீட்டுப் பணக்காரர்களிடம் எம்.ஜி.ஆர். வாதாடுவார். ஆணவத்தின் உச்சியில் அதிகாரத்தின் போதையில் மயங்கிக் கிடந்த அந்த வீட்டு ஆண்கள் அதற்கு மறுப்பு தெரிவிக்கும் போது மூத்த மகளான வெண்ணிற ஆடை நிர்மலா 'அவரை இந்த நாற்காலியில் உட்கார வையுங்கள் நானே பரிமாறுகிறேன்' என்பார். ஆனால் அதற்குள் அந்த ஏழை இறந்து போயிருப்பார். இக்காட்சியில் எம்.ஜி.ஆர். பசியால் வாடி உயிர்துறந்த ஒரு ஏழைக்கு நீதி கேட்கும் நியாயவானாகத் தோன்றுவார். சண்டைக் காட்சியாக இல்லாமல் சோகக் காட்சியாக இருப்பதனால் அடிதடி இல்லாமல் தன்னுடைய நியாயத்தை எடுத்துரைக்கும் வகையில் வசனங்கள் நிறைந்த காட்சியாக இயக்குனரும் வசன கர்த்தாவுமான ஸ்ரீதர் அமைத்திருப்பார்.

படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய படங்களில் அவர் அறிமுகமாகும் முதல் காட்சி அவர் இக்கதையில்



சந்திக்கும் சவால் போராட்டம் ஆகியவற்றை விளக்கும் வகையில் அமைந்தது. படகோட்டியில் கடைசிவரை அவர் இரண்டு குப்பமும் ஒன்று சேர வேண்டும் என்ற சவாலான பணியை ஏற்று அதனை வெற்றிகரமாக முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார். முதலாளியின் சூழ்ச்சிக்கு இடம் தரலாகாது என்ற கொள்கையோடு அவர் ஒவ்வொரு செயலையும் செய்து வருவார்.

மீனவ நண்பன் படத்தில் முதல் காட்சியிலேயே அங்கு வாழும் மீனவர்கள் பசியாலும் பட்டினியாலும் தவிக்கின்றனர். அவர்களுக்கு மீன் பிடிக்க செல்ல சொந்தப் படகு இல்லை. படகுகள் அனைத்தும் நம்பியாருக்கு அவருடைய மாமனாருக்கும் சொந்தம். மேலும் பிடித்துவரும் மீனில் முக்கால்வாசியை அவர்கள் கேட்கும் விலைக்கே அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனை உழைப்பைச் சுரண்டுவதாக அமைந்துள்ளது. எம்.ஜி.ஆர்.

இரண்டு படங்களிலும் மீனவர்களின் நன்மைக்காக போராடும் தலைமைக் கதாபாத்திரத்தை ஏற்றிருக்கிறார். இரண்டு படங்களிலும் அவர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் அவர்கள் தமது தொழிலில் சுதந்திரமாகச் செயல்படவும் பணக்கார முதலாளிகளின் பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆளாகாமல் இருக்கவும் அரசின் உதவிகளை பெற்று வழிவகைகள் செய்யும் கதாபாத்திரத்தில் நடித்திருப்பார்.

ஒரு கதாபாத்திரத்தின் தன்மையை அவரது உரையாடல்களும் செயல்பாடுகளும்

விளக்குகின்றன. படகோட்டி படத்துக்கு சக்தி கே கிருஷ்ணசாமி எழுதினார். மீனவ நண்பன் படத்தில் கதை வசனம் இரண்டிற்கும் ஸ்ரீதர் பொறுப்பேற்று இருப்பார். ஆனால் படகோட்டி படத்தில் வரும் வசனங்களைப் போல ஸ்ரீதரின் வசனங்கள் கூர்மையாக அமையவில்லை. நீளமான பல வாக்கியங்களாக அமைந்துள்ளன, காதல் கதைகளுக்கு குறிப்பாக முக்கோண காதல் கதைகளுக்கு வசனம் எழுதத் தெரிந்த ஸ்ரீதருக்கு சமூகப் பிரச்சனைகளுக்கு வசனம் எழுத தெரியவில்லை. உரையாடலுக்கு அடுத்த படியாக செயல்பாடு மூலமாக கதாபாத்திரத்தின் இயல்பு உணர்த்தப்படுகிறது.

பசிக்கு உணவளிக்கும் தாயுள்ளம் கொண்ட எம்.ஜி.ஆர்.

படகோட்டியில் ‘பழனியின் வீட்டில் குழந்தைகள் பசியோடு துடித்துக்கொண்டு இருக்கிறார்கள்’ என்று தன்னுடைய உணவை



அவர்களுக்கு வழங்கும் எம்.ஜி.ஆரின் செயல்பாட்டின் மூலம் அவரது தியாகம் புலப்படுகிறது. அதுபோல மீனவ நண்பனில் சொந்தப் படகு இல்லாத காரணத்தினால் மீன்பிடிக்க செல்ல இயலாமல் இருந்த மீனவர்களுக்கு எம்.ஜி.ஆர். பொதுவில் உணவு சமைத்து அனைவருக்கும் பரிமாறுகிறார். பின்னர் அவர்களுக்கு மரம் வெட்டும் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறார். இச் செயல்பாடுகள் அவருடைய தலைமைப் பண்பை விளக்கி கதாபாத்திரத் தெரிவுக்கு நியாயம் கற்பிக்கின்றன. இச்செயல்பாடுகள் தலைமைக் கதாபாத்திரம் தன்னுடைய மக்கள் மீது வைத்திருக்கும் அன்பையும் அக்கறையையும் புலப்படுத்துவதாக அமைகின்றன. இவ்வாறு ஒரு கதாபாத்திரத்தை வசனங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலமாகவும் படம் பார்க்கும் ரசிகர்களுக்கு அவருடைய இயல்புகளைத் தெளிவு படுத்தலாம்.

கதாபாத்திர வகைகள்

ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் கதாபாத்திரங்களை 6 வகையாக பிரிக்கின்றனர்.

தலைமை நாயகன் [HERO]

எதிர் நாயகன் [VILLAIN]

இயங்குநிலை பாத்திரம் [DYNAMIC]

தட்டை கதாபாத்திரம் [FLAT]

நிலைத்த கதாபாத்திரம் [STATIC]

முழுமையான கதாபாத்திரம். [COMPLETE]

தலைமைப் பாத்திரம் மற்றும் எதிர் பாத்திரம் ஆகியவை ஹீரோ என்றும் வில்லன் என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டு பேருமே ஏதேனும் ஒரு இலட்சியத்தை ஒரு கொள்கையைத் தன் வாழ்நாளில் இறுகப் பற்றிக் கொண்டு வாழ்ந்தாலும்



கூட ஒருவடைய கொள்கை நல்லதாகவும் அவருடைய கொள்கை மற்றவர்க்கு தீமை பயப்பதாக இருப்பதுதான் வேறுபாடு.

தலைமை கதாபாத்திரம் ஊர் மக்களுக்கு நன்மை செய்யும் கதாபாத்திரமாக அமைய தன்னைச் சேர்ந்த மக்களுக்கு தீமை செய்து தான் மட்டும் வசதியாக பிழைக்கும் தன்னலம் உடைய கதாபாத்திரமாக சித்தரிக்கப்படுகிறது. இவ்விரண்டு வகை தவிர இயங்கு நிலை கதாபாத்திரம் தட்டை கதாபாத்திரம் என்று ஒரு பிரிவு உண்டு. இயங்குநிலை கதாபாத்திரம் என்பது படம் முழுக்க சில மாற்றங்களைக் கொண்டதாக இருக்கும். தட்டை கதாபாத்திரம் என்பது படம் முழுக்க தான் எவ்வித பண்பு மாற்றமும் பெறாமல் ஆரம்பம் முதல் இறுதி வரை அப்படியே இருந்து கொண்டிருக்கும். பெரும்பாலும் கருணையுள்ள தாய் அன்பான பிள்ளைகள் நட்புணர்வு உள்ள நண்பர்கள் கதாபாத்திரப் படைப்பில் பெரிய மாற்றங்கள்



இருப்பதில்லை. இவர்கள் தலைமை கதாபாத்திரத்திற்கு உறுதுணையாக இருப்பது வழக்கம்.

இயங்கு நிலை கதாபாத்திரம் என்பது முதலில் நல்லவனாக இருந்து பிறகு கெட்டவனாகவோ, முதலில் கெட்டவனாக இருந்து கெட்டவர்களுடன் சேர்ந்து இருந்து பிறகு நல்லவர் பக்கம் வந்துவிடும் ஆளாகவும் கதாபாத்திரப் பண்பில் மாற்றம் கொண்டதாக அமையும். இதனை இயங்குநிலை கதாபாத்திரம் என்போம். இக்கதாபாத்திரத்தால் கதையில் பல மாற்றங்களும் திருப்பங்களும் உண்டாகும். படகோட்டியில் சரோஜாதேவியை இயங்கு நிலைக் கதாபாத்திரத்துக்கு சான்றாகக் கொள்ளலாம். இக்கதாபாத்திரம் சந்தைக் காட்சியில் இடம்பெறும் போது தன்னுடைய மக்களுக்கு மீன் விலையை ஏற்றித் தந்து நல்ல விளைவை



ஏற்படுத்தும். அதுபோல மீனவ நண்பன் படத்திலும் சாந்தி என்ற பெயரில் வரும் வெண்ணிற ஆடை நிர்மலா தன் அப்பா சேர்த்து வைத்திருந்த தங்கத்தையும் எடுத்துக்கொண்டு தப்பி ஓட நம்பியார் முயலும் போது தன்னுயிரைக் கொடுத்து தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபடுவார். இதனால் நம்பியார் போலீசில் மாட்டிக்கொண்டு சிறைத் தண்டனையும் பெறுவார். சிறையில் இருக்கும் கணவரை சென்று பார்க்கும் சாந்தியிடம் அவர் கணவர் நம்பியார் மனமிரங்கி அழுது இனி தான் எந்த தவறான செயலும் செய்ய மாட்டேன் என்று சொல்லி தான் திருந்தி விட்டதாக எடுத்துரைப்பார். இப்படத்தில் நிர்மலாவும் நம்பியாரும் இயங்குநிலை பாத்திரங்கள் ஆகும்.

நிர்மலா ஆரம்பத்தில் அமைதியாக இருந்தவர் பின்னர் தனது கணவரை தவறு செய்ய விடாமல் கடுமையாகத் தடுத்து நிறுத்துவார். பெண்களும் சமூக போராட்டங்களில் ஈடுபட வேண்டும் என்பதற்காக எம்.ஜி.ஆர். இக்காட்சியை வைத்திருந்தார்.



இயங்குநிலைப் பாத்திரங்களின் சமூகச் செயற்பாடு

பெண்களும் சமூக அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதை விரும்பிய எம்.ஜி.ஆர். அண்ணாதிமுக கட்சி ஆரம்பித்த பிறகு எடுத்த படங்களில் பெண் பாத்திரங்களைச் செயல் திறம் படைத்தவர்களாக அநீதியைத் தட்டிக் கேட்கும் துணிச்சல் படைத்தவர்களாகக் காட்டினார். இதனால் பெண்கள் தன் கணவர் மற்றும் தந்தை விருப்பங்களுக்கு மாறாக தாம் விரும்பிய அதிமுகவுக்குத் துணிந்து ஓட்டுப் போட்டனர்.

நிலைத்த கதாபாத்திரம்

நிலைத்த கதாபாத்திரம் மற்றும் முழுமையான கதாபாத்திரம் என்று இரண்டு வகை உண்டு இந்தக் கதாபாத்திரங்களால் பெரிய மாற்றம் எதுவும் கதைகளில் இருக்காது. நிலைத்த கதாபாத்திரத்திற்கு உதாரணமாக மீனவ நண்பன் படத்தில் மாரி என்ற பெயரில் வரும் கண்ணனைக் குறிப்பிடலாம். படம் முழுக்க நம்பியாருக்கு அடியாளாகவே வருவார். தன்னுடைய மீனவர் மக்களுக்கு எதிராகச் செயல்படுவார். அரசுக்கு எதிராக கள்ளக்கடத்தல் பொருள்களை கடலில் இருந்து கரைக்கு கொண்டுவந்து சேர்ப்பார். கடைசிவரை இவருடைய கதாபாத்திரம் இவ்வாறாகவே அமைந்துவிடும். இவருடைய பாத்திரப் பண்பில் எவ்வித மாற்றமும் இருக்காது. இது ஒரு தட்டை கதாபாத்திரம் ஆகும். இத்தகைய கதாபாத்திரத்தில் கதையோட்டத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படாது. கதையோட்டத்தில் எந்தவொரு விளைவையும் ஏற்படுத்த இயலாது.

முழுமையான கதாபாத்திரம்

படகோட்டியில் வரும் ராமதாசை முழுமையான கதாபாத்திரத்துக்கு உதாரணமாகக் காட்டலாம். இவர் கடைசிவரை தன் மக்களின் நன்மைக்காகவே வாழ்ந்து வருவார். நீலமேகத்தின் பிரிவினை சூழ்ச்சிக்கு ஆளாகி எதிர் குப்பத்தின் மக்களை எதிரியாக கருதுவார். இதற்குக் காரணம் இவர் முதலாளி நீலமேகத்தின் வார்த்தைகளில் வைத்திருந்த நம்பிக்கையாகும். நீலமேகத்துக்குப் பகையாக விளங்கும் குப்பத்தை இவரும் தனக்கு வேண்டாததாகக் கருதுவார். இடையில் தன்னுடைய மகளைத் திருமணம் செய்து தரவில்லை என்றால் எனது மக்கள் வெற்றுத்தாளில் கையெழுத்துப் போட்ட பத்திரங்களில் என்ன வேண்டுமானாலும் எழுதி நிரப்பிக் கொள்ள முடியும் என்ற ஆபத்தை உணர்ந்ததும் மகளைப் பலிகடாவாக்கி தன் மக்களைக் காக்க முன்வருவார். இக் கதாபாத்திரம் ஒரு முழுமையான கதாபாத்திரம் ஆகும்.

நம்பியார் சரோஜாதேவியை திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிந்ததும் அதுவரை நீலமேகத்துடன் வாழ்ந்து வந்த மீன்விழி [ஜெயந்தி] அவனுடைய சூது வஞ்சகம் நிரம்பிய எண்ணத்தை தெரிந்துகொண்டு தனக்குச் செய்த துரோகத்தையும் புரிந்துகொண்டு பத்திரங்களை ஒளித்து வைத்திருக்கும் இடத்திலிருந்து வெளியே எடுத்து சரோஜாதேவியிடம் கொடுத்து இவற்றைக் கொண்டு போய்விடு என்று சுவரேறிக் குதித்து வெளியேறும்படி வழியனுப்பி வைப்பார். ஆக



இந்தக் கதாபாத்திரம் முழுமையான பாத்திரப் பண்புகளை உடைய கதாபாத்திரம் ஆகும்.

வெளிப்படையான மற்றும் உள் நோக்குடையவை

கதாபாத்திரங்களை வெளிப்படையானவை [direct] மற்றும் உள்நோக்குடையவை [indirect] என்று பிரித்தது ஆராய்வது உண்டு. வெளிப்படையான பண்புடைய கதாபாத்திரங்கள் என்றால் படத்தில் வரும் கதாநாயகன், வில்லன் போன்றவர்கள் ஆவர். இவர்களைப் பற்றி படம் பார்ப்பவருக்கு எந்தச் சந்தேகமும் வராது. இவர்களின் பண்புகள் தெளிவாகத் தெரியும். தொடக்கம் முதல் முடிவு வரை ஒரே வகையான பண்புடையவர்களாக இருப்பார்கள். எவ்வித மாற்றமும் வருவதில்லை.

உள்நோக்குப் பண்புடைய கதாபாத்திரங்கள் என்போர் உள்ளே வேறு எண்ணம் கொண்ட கதாபாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டு இருப்பார்கள்.

இவர்களின் நடவடிக்கைகள் வேறுவிதமாக இருக்க உள்நோக்கம் எதிர்த் திசையில் பயணிக்கும். மர்மமான மனிதர்களாக இருக்கலாம். உள்ளொன்று வைத்து வெளியே வேறாக நடிக்கும் இரு நிலைப் பண்பு கொண்டவராகவும் இருக்கலாம். மீனவ நண்பன் படத்தில் தான் விரும்பும் பெண்ணை தன் தந்தையார் திருமணம் செய்து கொண்டார் என்று தெரிந்த பிறகும் அவளை மறக்க முடியாமல் அவளிடம் நாகேஷ் அன்பு காட்டுவார். ஆனால் அந்த இளம் மனைவியோ அவரை 'மகனே மகனே டேய் ரத்தினம்' என்று அழைத்து தனது தாய் ஸ்தானத்தைக் காட்டுவார். இங்கு நாகேஷின் கதாபாத்திரம் உள் நோக்குடைய கதாபாத்திரமாக அமைந்திருப்பதாக தோன்றும். அவரால் தாய் ஸ்தானத்தில் வைத்து சச்சுவை மதிக்க முடியவில்லை என்பதால் கடைசியில் துறவியாக மாறி விடுவார்.



மூல படைப்பு வகைகள் [archetypes]

ஒரு கதையில் அல்லது படத்தில் 12 வகையான மூல கதாபாத்திரங்களே இடம்பெற வாய்ப்பு உண்டு என்று ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் பட்டியலிட்டுள்ளனர்.

1. தலைமை கதாநாயகன்,

2. அக்கறை அல்லது பரிவு காட்டுபவர்,

3. புதியவற்றை அறிமுகம் செய்பவர்,

4. கலகக்காரர்,

5. காதலர்,

6. படைப்பாளி அல்லது கலைஞர்,

7. நகைச்சுவையாளர்,

8. அப்பாவி,

9. துறவி,

10. மந்திரவாதி,

11. அனாதை ஏழை எளியவர் ஒடுக்கப்பட்டோர்,

12. ஆட்சியாளர் மற்றும் அதிகாரம் படைத்தவர்.

ஒரு கதையில் படத்தில் காவியத்தில் ஓவியத்தில் இத்தகைய பண்பு உடையோரே இடம்பெற வாய்ப்பு உண்டு. இவர்க ளே முக்கிய கதாபாத்திரங்களாக அமைந்து கதையின் ஓட்டத்திற்கு உதவுகின்றனர்.

1. தலைமை பாத்திரம்

படகோட்டி மற்றும் மீனவ நண்பனில் கதாநாயகனாக வரும் எம்.ஜி.ஆர் கதையில் தான் நினைத்த காரியங்களை பல தடைகளைக் கடந்து சிறப்பாக நிறைவேற்றி இறுதியில் தன்னுடைய மக்களின் நன்மதிப்பைப் பெறுகிறார். இதன் மூலமாக படம் பார்க்கும் ரசிகர்களின் ஆதரவையும் பெற்று ஓட்டுக்களையும் பெற்று தன்னுடைய கட்சியை ஆளுங்கட்சி ஆக்குகிறார். இவர் படத்திலும் நிஜ வாழ்விலும் மன உறுதி உள்ளவர் என்பதை ஒரு எடுத்துக்காட்டால் உணர்த்தலாம். படகோட்டி படப்பிடிப்பு கொச்சி அருகே நடத்த திட்டமிட்டிருப்பதாக அறிந்ததும் பலரும் எம்.ஜி.ஆர். அங்கு போய் நன்றாக மீன் சாப்பிடுவார். அவருக்கு மீன் என்றால் அலாதி பிரியம் என்று நினைத்தனர்; பேசிக் கொண்டனர். இதனை அறிந்த எம்.ஜி.ஆர். உடனே ஒரு சவால் விட்டார் அங்கிருக்கும் வரை நான் மீன் சாப்பிடுவதில்லை



என்றார். மொத்தம் நாற்பத்திரண்டு நாட்கள் கேரளாவில் படப்பிடிப்பு நடந்தது. அவர் மீனைத் தொடவேயில்லை. அத்தகைய மனக் கட்டுப்பாடு உடையவர் எம்.ஜி.ஆர். என்பதால் படங்களில் மட்டுமல்லாது சொந்த வாழ்விலும் அவர் வெற்றிக்கொடி நாட்டினார்.

2. அக்கறை அல்லது பரிவு காட்டுவோர்

படகோட்டியில் மனோரமாவும் மேலும் மீனவ நண்பனில் வரும் லதாவும் நிர்மலாவும் எம்.ஜி.ஆர் மீதும் எம்.ஜி.ஆர் செய்யும் செயல்களின் மீதும் அக்கறையும் பரிவும் உள்ளவராக இருக்கின்றனர். படகோட்டியில் சமாதானம் பேசப் போன எம்.ஜி.ஆர் திரும்பி வரவில்லை என்பதையும் அடையப்பனுக்கு விருந்து வைத்திருப்பதையும் இணைத்து நோக்கி தந்து குப்பத்து ஆண்களிடம் ‘போய் பார்த்துவிட்டு வாருங்கள்’ என்று அங்கு சென்று விசாரித்து வரும்படி மனோரமா அனுப்பி வைக்கிறார்.



மீனவ நண்பன் படத்தில் வரும் வெண்ணிற ஆடை நிர்மலா படத்தின் கடைசி வரை தன் தங்கையின் காதலுக்கு ஆதரவாக இருப்பதும் தங்கையை எம்.ஜி.ஆர் திருமணம் செய்து கொண்டு வரும் பொழுது அவர்களுக்கு தாய் ஸ்தானத்தில் இருந்து ஆரத்தி எடுத்து அன்றிரவு அங்கேயே தங்கும்படி செய்து அவர்களை கவனித்துக் கொள்வதும், கணவன் செய்யும் தீய செயல்களுக்கு உடந்தையாக இல்லாமல் நேர்மையான வழியில் நடக்கும் எம்.ஜி.ஆருக்கு ஆதரவளிப்பதுமாக நல்லவர்கள் மீது பரிவும் அக்கறையும் கொண்டவராக இருப்பார்.

3. புதியவற்றை அறிமுகம் செய்வார்

இரண்டு படங்களிலும் எம்.ஜி.ஆர் தங்களுடைய குப்பத்து மக்களின் மீனவ சகோதரர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக புதிய புதிய ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் தேடுகின்றார். படகோட்டி புதிய எஜெண்டிடம் பேசி இனி அவரிடம் நமது மீன்களை விற்கலாம் என்று முயற்சி செய்கிறார். பின்பு அரசு அதிகாரியைச் சந்தித்து அரசாங்க உதவிகளைப் பெறும் முயற்சியில் ஈடுபடுகிறார். மீனவ நண்பன் படத்தில் மீன் பிடிக்க படகுகள் இல்லாமல் தவிக்கும் மீனவர்களுக்கு மொத்தமாக சோறு ஆக்கி பரிமாறி அவர்களின் பசியைப் போக்கினார். அடுத்தகட்டமாக அவர்களுக்கு மாற்று வேலைகள் தேடி மரம் வெட்டும் பணியில் அவர்களை ஈடுபடுகிறார். பின்பு அரசாங்க உதவியுடன் மின்சார படகு கிடைத்ததும் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை கடலுக்கு

அனுப்புகிறார். மக்களின் பிரச்சனைகளை நினைத்து புலம்பிக் கொண்டு சும்மா இருக்காமல் புதிய புதிய வாய்ப்புகளையும் வழிவகைகளையும் ஆராய்ந்து துன்பங்களை தீர்ப்பவனே நல்ல தலைவன் என்ற இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக எம்.ஜி.ஆர் திகழ்கிறார். இவ்விரு படங்களிலும் தலைமை கதாநாயகனும் புதியவற்றை அறிமுகம் செய்பவனும் ஒரே கதாபாத்திரமாகவே அமைந்து விட்டனர்.

4. கலகக்காரர்

பணக்காரர்கள் ஏழைகளின் உழைப்பையும் பொருளையும் சுரண்டுவதற்கு அவர்களிடமிருந்தே ஒருவரை தெரிவு செய்து தமக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு அந்த ஆளின் மூலம் ஏழைகளைக் கசக்கிப் பிழிவது வழக்கம். பெரும்பாலும் ஆங்கிலேயர் காலத்தில் இவர்களை கண்காணி என்று அழைப்பதுண்டு. இவர்கள் போராட்டக்காரர்கள் கிடையாது. படகோட்டி படத்தில் வரும் சங்கா, மீனவ நண்பன் படத்தில் வரும் மாரி ஆகியோர் இவ்வகையை சேர்ந்தவர்கள் ஆவர்.

5. காதலர்

படகோட்டி படத்தில் இரண்டு காதல் ஜோடி காட்டப்படுகின்றது. நாயகனான எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி ஜோடி. நகைச்சுவை கதாபாத்திரம் ஏற்று இருக்கும் நாகேஷ் - மனோரமா ஜோடியாகும் இவ்விரு ஜோடிகளின் காதலும் நேர்மையான காதலாக காட்டப்பட்டுள்ளது. நாகேஷ் மனோரமா காதல் ஜோடி ரசிகர்களின் வரவேற்பு பெற்ற ஜோடியாக அக்காலத்தில் இருந்து வந்தது. இதில் அசோகன் ஒருதலையாக காதலிக்கும் காட்சிகள் சில

இடம்பெற்றன. இக்காட்சிகள் படத்திற்கு நேரடியாக தேவை இல்லை என்ற போதும் அசோகனிடமிருந்து மனோரமாவை காப்பாற்றியதால் அவருக்கு நாகேஷ் மீது காதல் உண்டாகின்றது என்று காதலுக்கான் காரணம் காட்டுவதற்காக சேர்க்கப்பட்டுள்ளது.

மீனவ நண்பன் படத்தில் நகைச்சுவை என்ற பெயரில் ஒரு இளம்பெண் மீது அப்பாவும் மகனும் காதல் கொள்ளும் நிகழ்ச்சிகள் பார்ப்பவருக்கு அருவருப்பாக இருந்தாலும் கூட அது ஒரு உண்மைச் சம்பவத்தை எடுத்துக் கூறியதால் அரசியல் பிரச்சாரமாக அமைந்துவிட்டது.

படகோட்டியில் சங்கம் வைத்து இருப்பதினால் எந்த ஒரு பயனும் மீனவருக்குக் கிடைக்கப் போவதில்லை. நல்ல மனிதன் ஒருவன் தலைவனாக வந்தால் மட்டுமே மக்களுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும் என்ற கருத்து உணர்த்தப்படும் வகையில் சங்கத்தை இப்படத்தில் கேலிப்பொருளாக்கி



இருக்கின்றனர். நாகேஷ் என்ன சொன்னாலும் ''இதை நான் ஆமோதிக்கிறேன்'' என்று அவருக்கு ஜால்ரா போடும் ஒரு செயலாளர் இருப்பதும் வேடிக்கைக்குரியதே. கடலில் விழுந்த உறுப்பினரைக் காப்பாற்ற முயற்சி எடுக்காமல் சங்கத்தின் அங்கத்தினர் கட்டணம் முறையாகச் செலுத்தி இருக்கின்றாரா என்று சரிபார்க்கும் செயற்கைத் தன்மையான நிர்வாகப் போக்கு நகைச்சுவை என்ற பெயரில் இவை கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. சங்கங்கள் நிர்வாகத்தில் காட்டும் அக்கறையை உறுப்பினர்கள் மீது காட்டுவதில்லை என்ற கருத்தை நாகேஷ் சம்பந்தப்பட்ட காட்சிகள் நகைச்சுவையோடு எடுத்துச் சொல்கின்றன.

9. துறவி அல்லது மந்திரவாதி

இத்தகைய கதாபாத்திரங்கள் சில கதைகளில் முக்கிய இடத்தைப் பெறும். ஆனால் எம்.ஜி.ஆர். படங்களில் பெரும்பாலும் இவை இடம் பெறுவதில்லை. எனினும் படகோட்டியில் எம்.ஜி.ஆர் சாமியாரைப் போல காவி அங்கி அணிந்து ஒரு வயதானவர் வேடத்தில் வந்து இரண்டு குப்பத்தையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபடும்போது அவர் சுயநலமற்ற பற்றற்ற துறவியாகக் காட்டப்படுகிறார். இரண்டு குப்பமும் நன்றாக இருக்கவேண்டும் என்ற பொதுநலச் சிந்தனையுடன் இருக்கின்றாரே தவிர தன்னுடைய காதல், தன்னுடைய குப்பம், தன் மக்கள் என்ற தன்னலச் சிந்தனை கிடையாது. எனவே துறவி என தனியாக ஒரு கதாபாத்திரம் இல்லாவிட்டாலும் தலைமை கதாபாத்திரமே ஒரு சில காட்சிகளில்

துறவியாக மாறுவேடம் பூண்டு காவி உடை உடுத்தி வருவதும் உண்டு.

11. ஏழை/ எளியோர்/ ஒடுக்கப்பட்டவர்

இரண்டு படங்களிலும் இல்லாதவனுக்கும் இருப்பவனுக்கும் இடையிலான போராட்டங்களே முக்கிய சிக்கலாக அமைந்திருக்கும். இல்லாதவன் என்பவன் பணம் இல்லாதவனாகவும் அதிகாரம் இல்லாதவனாகவும், நிலம் இல்லாதவனாக இருப்பது வழக்கம். படகோட்டி மீனவ நண்பன்



படங்களில் கடலில் நிறைய மீன் உண்டு; போய் மீனைப் பிடிக்க படகுகள் கிடையாது. இதுதான் முக்கிய இல்லாமை. படகு இருந்திருந்தால் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டு வந்து மீன்பாடுக்கு ஏற்றபடி தங்களது மீன்களை விற்கலாம். படகு இல்லாத காரணத்தால் மீனவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். படகுகளை வழங்கும் பணக்காரர்கள் அவர்கள் பிடிக்கும் மீன்களைத் தங்கள் விருப்பத்தின் பேரில் சொற்ப விலை கொடுத்து இவர்களிடம் வாங்கி அவற்றை ஏற்றுமதி செய்கின்றனர். பணக்காரர்கள் ஏஜெண்டுகளாக செயல்படுகின்றனர். இதனால் இரு படங்களிலும் படகு, பாதுகாப்பான வீடு, மீன்பாடு இல்லாத காலங்களில் நிதி உதவி போன்றவை இல்லாத காரணத்தால் மீனவர்கள் வறுமையிலும் வாடுவதை காண்கிறோம். எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பின்பு இவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுத்து மானியத்துடன் கூடிய கடனுதவி அளித்து வழங்கினார்.

12. ஆட்சியாளர்/அதிகாரம் படைத்தோர்

படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரு படங்களிலும் வில்லனாக இருக்கும் நம்பியார் அதிகாரம் படைத்தவராக மீனவர்களிடம் மீனை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி என்றென்றும் வறுமை கோட்டின் கீழேயே இருக்கும்படி வைத்துக் கொள்கிறார். குப்பங்கள் ஒற்றுமையாக இணைந்துவிட்டால் அரசாங்கத்தின் உதவி கிடைத்து தன்னிறைவு பெற்றவர்களாக செயல்படத் தொடங்கிவிடுவார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட நம்பியார் பிரித்தாளும் சூழ்ச்சி புத்தி கொண்டவராக

இவர்களுக்குள் பகையை மூட்டி விட்டு ஒற்றுமையாக இணைய விடாமல் செய்கிறார். அவர்களின் வறுமை காலங்களில் வட்டிக்குப் பணம் கொடுத்து அவர்கள் பிடிக்கும் மீனை குறைந்த விலைக்கு பெற்றுக்கொண்டு அவர்களிடம் வட்டியும் வசூலிக்கிறார். இவ்வாறு அதிகாரம் படைத்த செல்வாக்குடையவர்கள் ஏழைகளின் உழைப்பைத் தங்களின் சுய இலாபத்துக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள் நிறைவு

'தலைவன் என்ற பெயரில் நான் ஒரு தொண்டன்'

படகோட்டி படத்தில் எம்.ஜி.ஆரின் கதாபாத்திரம் இரண்டு குப்பங்களும் இணைய வேண்டும் என்ற முயற்சியில் செயல்பட்டு கொண்டு வருகிறது. அடுத்தடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் போனதனால் எதிரி குப்பத்திற்குள்ளேயே போய் மாறுவேடத்தில் தங்கி படகுப் போட்டியில் ஜெயித்து மீன் பிடிக்கும் உரிமையை இரண்டு குப்பத்துக்கும் பொதுவாக்கித் தருகிறார். தான் கொண்ட கொள்கையில் மெல்ல மெல்ல படிப்படியாக முன்னேறிக் கொண்டு வரும் ஒரு உத்தம கதாபாத்திரமாக எம்.ஜி.ஆருடைய கதாபாத்திரம் அமைந்திருக்கிறது. தன்னுடைய குப்பத்து மக்கள் எதிரி குப்பத்துத் தலைவனின் மகளை திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று திட்ட வட்டமாக உரைத்ததும் தன் மக்களுக்காக காதலைத் தியாகம் செய்யும் பொதுநலச் சிந்தை கொண்ட கதாபாத்திரமாக வார்க்கப்பட்டுள்ளது.

சரோஜாதேவிக்கு நீலமேகத்துடன் திருமணம் என்றும் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று எம்.ஜி.ஆரைக் கேட்டுக் கொள்ளும் போது அவர்



மறுப்பதும். மனோரமா திருமணத்தை தடுத்து நிறுத்துவதன் மூலம் இரு குப்பங்களும் ஒன்று சேர வாய்ப்பு ஏற்படும் என்று கூறியதும், தன் குப்பத்து மக்களின் நன்மைக்காக நீலமேகத்தின் பங்களாவுக்கு மாறுவேடத்தில் செல்கிறார். ஆக மக்கள் நலம் அதன் குறிக்கோள் பிற வகையில் ஒரு சிறந்த மக்கள் தலைவனாக இக்கதாபாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

தாத்தா வேடத்திலும் வளையல் செட்டி வேடத்திலும் எம்.ஜி.ஆருக்கு நடிக்க நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வேடப் பொருத்தமும் அச்சு பிசகாமல் அமைந்திருக்கிறது.

மீனவ நண்பன் படத்தில் அப்பா அம்மா இல்லாத அவரது கல்வி, சமுகம் பொருளாதாரப் பின்புலம் என்னவென்று தெரியாத குமரன் என்ற ஒரு இளைஞன் ஒரு குப்பத்துக்குள் வந்து பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைக்கும் பணக்காரரை எதிர்த்து மீனவர்களுக்கு ஆதரவாக அவர்களோடு தங்கி இருந்து வாழ்வாதாரத்துக்கு

உயர்த்த உதவிகள் செய்து பிறகு அரசாங்க உதவியுடன் அவர்களுக்கு ஒரு மின்சார எந்திர படகு வாங்கித்தருவதாக இப்படத்தில் உருவாக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் நடித்த தலைமைக் கதாபாத்திரம். படகோட்டி எம்.ஜி.ஆர்.ரின் பாத்திரத்தை போல சிறப்பாக வார்க்கப்படவில்லை. ஆனால் மீனவருக்கு நன்மை செய்யும் காட்சிகள் காட்டப்படுகின்றன.

முதல் காட்சியில் பசியால் பட்டினிச் சாவு அடைந்த ஏழை ஒருவனின் சார்பில் நியாயம் கேட்பதும் பின்னர் அவன் தாய் தந்தையருக்கு தானே மகனாக இருந்து மீன்பிடித்து உதவுவதும் அவர்களை தன்னோடு வாழவைத்து தன் மனைவியின் கையால் அவர்களுக்கு சமைத்து போட்டு ஒரு குடும்பமாக இருப்பதும், பாத்திரம் ஒரு தாய் தந்தையரை தத்தெடுத்துக் கொண்ட நல்ல மகன் என்ற சிறந்த கதாபாத்திரமாக அமைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். முதல்வரானதும் ஏழை முதியவர்களுக்கு சத்துணவும்



ஒய்வூதியமும் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார். படத்தில் மட்டுமல்ல நிஜத்திலும் அவர் ஏழைத் தாய்மாருக்குத் தலைமகனாகவே நடந்துகொண்டார். தாய்மார்களுக்கு உதவிகள் செய்யும் போதும் 'உங்க மகன் ராமச்சந்திரன் குடுக்கிறேன் மா வாங்கிக்கங்க' என்பார். கொடிகாத்த குமரனின் மனைவி ராமாயி அம்மாள் எம்.ஜி.ஆரை என் மகன் என்றே எல்லோரிடமும் குறிப்பிட்டார்.

வயதான பெண் ஒருவர் வாழ்ந்து வந்த வீட்டையும் நிலத்தையும் அதிகாரம் படைத்த அரசியலவாதி ஒருவர் ஆக்கிரமிக்க நினைத்த போது அப்பெண் எம்.ஜி.ஆரைப் போய் பார்த்து முறையிட்டார். எம்.ஜி.ஆர். அந்த அரசியல்வாதியை வரச்சொல்லிக் கண்டித்தார். 'இனி யாராவது உங்களுக்குத் தொல்லை கொடுக்க முன்வந்தால் அவர்களிடம் என் மகன் ராமச்சந்திரன் இருக்கிறான் என்று துணிச்சலோடு சொல்லுங்கள்' என்று சொல்லி அத்தாயின் மனதில் தெம்பும் தைரியமும் ஊட்டினார்.

ஏழைகள் தனக்கு சார்பாக குரல் கொடுத்து படகு கொடுக்காததால் தாங்களும் படகைத் தொட மாட்டோம் என்று சொல்லி எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக நிற்கும் காட்சி அவர் ஆரம்பித்த அண்ணா திமுக கட்சிக்கு மக்கள் ஆதரவைத் திரட்டி அவற்றை வாக்குகளாக மாற்றி எம்.ஜி.ஆரை முதலமைச்சர் ஆக்கியது. படகு இல்லாத காரணத்தால் அவர்கள் மீன்பிடிக்கப் போகாமல் பசியோடு இருந்தபோது குமரன் உணவு அளித்ததும் மாற்றுத் தொழிலுக்கு ஏற்பாடு செய்ததும் தன்னை நம்பியவர்களை தலைவன் நட்டாற்றில்

விடமாட்டான் என்ற கருத்தை ஆழமாக மக்கள் மனதில் பதிய வைத்தது. இதனாலும் அவருடைய கட்சிக்கு வாக்குகள் அதிகரித்தன.

படகோட்டி படம் வெளிவந்த காலத்துக்கும் மீனவ நண்பன் படம் வெளிவந்த காலத்திற்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. மீனவ நண்பன் தனது காலத்திற்கு ஏற்ற தேவைகளை நிறைவு செய்தது. இரண்டு படங்களிலும் மற்ற கதாபாத்திரங்கள் எம்.ஜி.ஆர். உடைய கதாபாத்திரத்திற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையிலேயே செதுக்கப்பட்டிருந்தன. எம்.ஜி.ஆர். படங்களில் எம்.ஜி.ஆர். நல்லவர் வல்லவர் என்ற கருத்தாக்கத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் வகையில் அப்படத்தில் வரும் துணைக் கதாபாத்திரங்கள் மற்றும் வில்லனின் கதாபாத்திரம் உருவாக்கப்படும். இத்தகைய பாத்திரப் படைப்பு உருவாக்கம் என்பது எம்.ஜி.ஆரின் சிறப்புப் பண்புகளை உறுதி செய்யும் நோக்கம் கொண்டது ஆகும்.

3. படகோட்டி மீனவ நண்பன் படங்களில் உரையாடல் சிறப்பு

படகோட்டி படத்திற்கு சக்தி கிருஷ்ணசாமி வசனம் எழுதினார். நகைச்சுவை பகுதிகளை மட்டும் ஏ.எல். நாராயணன் எழுதினார். மீனவ நண்பன் படத்திற்கு கதை வசனம் ஸ்ரீதர் நகைச்சுவைப் பகுதியை மட்டும் கோபு எழுதினாரா என்பது தெரியவில்லை. இரண்டு படங்களுக்குமே வசனங்கள் எம்.ஜி.ஆர். படத்திற்கு ஏற்றவகையில் எழுதப்பட்டுள்ளன. பகுத்தறிவு சார்ந்ததாக சமூக மாற்றத்திற்கு வழி வகுப்பதாக மேம்பாடு நோக்கம் உடையதாக இப்படங்களின் உரையாடல்கள் அமைந்தன.

உரையாடல் வகைகள்

ஆங்கில அறிஞர்கள் உரையாடலை நான்காக வகைப்படுத்தினர். அவை;

1. விவாதம் [debate]

2. வசை மொழி [diatribe]

3. பொழிவு [discourse]

4. இருவர் கருத்துப் பகிர்வு. [dialogue]

இந்நான்கும் இருவருக்கு இடையில் நடைபெறும் கருத்து பரிமாற்றத்தை குறிக்கிறது.

1. விவாதம்

ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட கருத்துகளைப் பகிரும் பொது விவாதம் தோன்றுகிறது. படத்தின் கதாநாயகனும் வில்லனும் பேசிக்கொள்ளும் காட்சிகளில் இடம்பெறும் உரையாடல்கள் விவாத வகையினவாகும்.

ஒருவர் மீது மற்றவர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துதல். தன் பக்கத்தில் நடைபெற்ற குற்றங்களை வில்லன் மறுத்துப் பேசுதல் ஆகியன விவாதத்துக்கு வழி வகுக்கின்றன. படகோட்டியில் வட்டிக்கு கடன் வாங்க வந்த திருக்கை மீன் குப்பத்து மக்களிடம் ஏமாற்றி கையெழுத்து வாங்கும் நம்பியாரிடம் எம்.ஜி.ஆர். பேசும் வசனம் இதற்கு தக்க எடுத்துக்காட்டாக குறிக்கும். நீலமேகம் அடிப்பது பகல் கொள்ளை எனத் தன் மக்களிடம் எம்.ஜி.ஆர். எடுத்துக்கூறியதும் நம்பியார் எம்.ஜி.ஆரைப் பார்த்து,

நம்பியார் : மாணிக்கம், எங்க வந்து என்ன பேசுற?

எம்.ஜி.ஆர். : என் மக்கள் கிட்ட அவங்க அறியாமையப் பத்தி பேசுறேன்.

நம்பியார் : என் வீட்ல இருந்து என்னபப்பத்தியே பேசுறியா?

எம்.ஜி.ஆர். : எங்க இருந்தா என்ன? நீதியைப் பேச இடமா தேவை.

அசோகன் : இந்த பட்டினிக்கூட்டம் கால்ல விழுந்து காசு கேட்டதே அது யார் குற்றம்?.

எம்.ஜி.ஆர். : கால்ல விழுந்த கூட்டத்துக்கிட்ட கருணை காட்டனும். இப்படி உயிரைப் பறிக்கக்கூடாது.

நம்பியார் : உயிரைக் கொடுக்கிறேன். இல்ல இந்தக் கூட்டம் இப்பவே செத்துருக்கும். வாழ வைக்க வழி இல்லாத வறட்டுப் பய நீ, தலைவனாம்.

எம்.ஜி.ஆர். : [கோபத்துடன்] உதவி என்று வந்தவர்களைப் பணம், பதவி என்ற பெயரால் உயிரோடு விழுங்கும் திமிங்கலம் நீ.

நம்பியார் : [தனது அடியாளைப் பார்த்து] ரெங்கா ஏன் நிக்கிற தள்ளு அவன வெளியே.

எம்.ஜி.ஆர். : நெருங்காதே, ஜாக்கிரதை . . . கடைசியா உங்களுக்கு ஒன்னு சொல்றேன். இல்லாதவங்க



குறைவது நன்மை, இல்லாதவங்க நிறைவது தீமை. அது உங்களுக்கே.

[தன் குப்பத்தினரைப் பார்த்து] வாங்க போகலாம்.

நீலமேகம் போன்ற தனியாரின் கொடுமைகளில் இருந்து மீனவர்களை மீட்க எம்.ஜி.ஆர். தான் முதலமைசரானதும் மீன்பாடு இல்லாத காலங்களில் (மூன்று மாதம்) அவர்களுக்கு உதவித்தொகை வழங்கினார். அரசு வழங்கிய இந்த உதவித்தொகையை அவர்கள் மீன் பிடிக்கச் சென்றதும் மாதம் 10 வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்த உதவித்தொகை இப்போது பலமடங்கு உயர்ந்துவிட்டது.

2. வசைமொழி

ஒருவரை ஒருவர் ஏசும் சொற்கள் வசை ஒளியில் இடம்பெறும். பொதுவாக ஒரு பண்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்படாத பழக்க வழக்கங்கள் வசை மொழியாகத் தங்கிவிடும். படகோட்டி படத்தில்



நாகேஷின் காதலிக்கு அவரது சங்கத்தினர் வாழ்த்து பத்திரம் எழுதி அனுப்பியிருப்பார். அதனை வாசித்து பார்த்தால் அதில் பாடாத குயிலே ஆடாத மயிலே என கேலி வார்த்தைகள் இடம் பெற்றிருக்கும். இவை மனோரமாவின் தகுதியைக் குறைத்து பேசும் வாசகங்கள் ஆகும். படம் பார்ப்பவர்கள் இதனைக் கேலியாக கருதினாலும் இதுவம் வசை மொழியே ஆகும்.

3. பொழிவு

பொழிவு என்பது ஆழமான கருத்துக்களை அழகாக நிரல் படுத்தி எடுத்துரைப்பதாகும். படகோட்டி படத்தில் தன் குப்பத்தை சேர்ந்தவர்கள் நீலமேகத்திடம் கடன் வாங்க வந்திருந்தபோது எம்.ஜி.ஆர் அங்கு வந்து, அவர்களிடம் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்ய வந்த விவரம் கெட்ட செயலை அவர்களுக்குப் புரியும்படி எடுத்துரைப்பார். இது ஒரு நீண்ட சொற்பொழிவு போல இல்லாமல் அழகான



உரையாடலாக இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

எம்.ஜி.ஆர். : ஆமா, இதை நீங்க படிச்சு பாத்தீங்களா?

மக்கள் : இல்ல தம்பி.

எம்.ஜி.ஆர். : இதுல என்ன எழுதிருக்கு தெரியுமா? நீங்க பிடிக்கிற மீன் அத்தனையையும் அவர் கேட்ட விலைக்கு அவருக்கே விக்கனுமாம், வாங்குற பணத்துக்கு வட்டி வேற. இரண்டு மாசத்துல அசலவிட அது மூனு பங்கு குட்டி போடும். இதுக்கு பேர்தான் பகல் கொள்ள.

4. இருவரிடையே நடக்கும் கருத்துப் பகிர்வு

இருவரிடையே நடக்கும் கருத்துப் பகிர்வு என்பதற்கு உதாரணமாக இரண்டு படங்களிலுமே பல காட்சிகளில் இடம்பெறும் உரையாடல்களை எடுத்துரைக்கலாம். படகோட்டியில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் பேசும் முதல் காட்சியின் உரையாடல் குறிப்பிடத்தக்கதாகும்.

சரோஜாதேவி : அய்யோட சொக்கி என்னாங்ரே நண்டு கால புடிக்கிற மாதிரி புடிக்கிறியே என்ன விசயம்?

எம்.ஜி.ஆர். : அய்யய்யோ தப்பு தப்பு நீ வெறும் பொண்ணா? நான் கடல் தேவதன்னுல நெனச்சேன்.

சரோஜாதேவி : ஏங்ரே நான் அப்படியா இருக்கேன்?

எம்.ஜி.ஆர். : கடற்கரையில நான் மயங்கி கெடந்தப்போ ஜல் ஜல்னு இதே சத்தம், அன்னம் போல் இதே நட, வாழைத்தண்டு போல இதே கால் ஆமா நீ தானே அதுவும்.

சரோஜாதேவி : அய்யோடி சொக்கி நீ அழகழகா சொல்றியே! நான் ஏன் இல்லன்னு சொல்லப்போறே அதே பொண்ணுதான் நான்.

எம்.ஜி.ஆர். : உன் பேரு?

சரோஜாதேவி : முத்தழகி

எம்.ஜி.ஆர். : ஆஹா எவ்வளவு பொருத்தமா இருக்கு. பொறந்ததும் ஆள பாத்து வச்ச பேரா?

சரோஜாதேவி : ஏங்ரே நான்தா கேக்குறேன் உங்கவீட்ல வயித்துல இருக்கும்போதே பேரு வச்சுருவாங்களா?

எம்.ஜி.ஆர். : இல்ல . . . .

சரோஜாதேவி : இழுக்காத. . . . உம்பேரு?

எம்.ஜி.ஆர். : மாணிக்கம்

சரோஜாதேவி : இது மட்டும் என்னவா? எம்பேருக்கு சரியாதான் இதுவும் ஈடுகொடுக்குதே.

எம்.ஜி.ஆர். : நீ சொன்னா சரி.

சரோஜாதேவி : சரி சரி, சீக்கிர சாப்பிட்டு போய் சேரு, இல்லே எங்க ஆளுங்க உன்ன பாத்துட்டாங்க அப்புற நீ அவுட்டுதான்

எம்.ஜி.ஆர். : அய்யோடி சொக்கி உங்க ஆளுங்க என்ன வெடி மருந்தா?

சரோஜாதேவி : ஏங்ரே இது என்ன? திருக்கை மீன், அந்த குப்பத்து ஆள்தான நீ?

எம்.ஜி.ஆர். : ஆமா.

சரோஜாதேவி : இது என்ன தெரியுமா? சுறா மீன் குப்பம். எங்க ஆளுங்க எதிரிய பாத்து சும்மா விட்ருவாங்களா?

எம்.ஜி.ஆர். : அப்போ நீ மட்டும்?

சரோஜாதேவி : ஆமா நான் தான் காப்பாத்துனே

எம்.ஜி.ஆர். : எதிரிய ஏன் காப்பாத்துன?

சரோஜாதேவி : எதிரிய ஏன் காப்பாத்துனே? அதான் புரியலே.

எம்.ஜி.ஆர். : எனக்கு புரியுது.

சரோஜாதேவி : புரியுதா? சொல்லு, சொல்லுங்ரே

எம்.ஜி.ஆர். : என் கண்ண பாத்துருப்ப

சரோஜாதேவி : கண்ண பாத்தா?

எம்.ஜி.ஆர். : என்னமோ பண்ணிருக்குமே

சரோஜாதேவி : என்ன பண்ணுச்சு? மறந்துட்டனே

எம்.ஜி.ஆர். : ஹ இப்ப பாரு
(இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தல்)

சரோஜாதேவி : யோவ் அப்படியெல்லா பாக்காத மனசு என்னென்னமோ பண்ணுது.

எம்.ஜி.ஆர். : என்ன பண்ணுது . . . .

சரோஜாதேவி : தொடாதே சாப்பிடு . . . . .

எம்.ஜி.ஆர். : ஹம் என்ன பயந்துட்டியா?



சரோஜாதேவி : அய்யோடி சொக்கி நான் ஏன் பயப்படுறே நீதாங்ரே சமய தெரியாம வெளயாடுறே

எம்.ஜி.ஆர். : ஊருக்கு உலகத்துக்கு பயப்படுறவே நான் இல்ல

சரோஜாதேவி : ஓஹோ நான் மட்டு காப்பாத்தலனா?

மாணிக்கம் : ஆமா என்ன மெத்தன்னு நெனச்சு எம்மேல உக்காந்துட்டு . . .

சரோஜாதேவி : மன்னிச்சுடுங்ரே

எம்.ஜி.ஆர். : அடடே விளையாட்டுக்குல சொன்னே. ஆமா என்ன காப்பாத்த நீ ஏன் இவ்வளவு அக்கறை எடுத்துக்குற?

(இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தல்)

எம்.ஜி.ஆர். : வரட்டுமா?

சரோஜாதேவி : மௌனமாக அழுதல்.

மீனவ நண்பன் படத்திலும் எம்.ஜி.ஆரை நிறுத்தி வைத்து அவரிடம் லதா கேள்வி கேட்டு அவரது கொள்கை மற்றும் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முயலும் காட்சியில் இடம்பெறும் உரையாடல் சிறப்பானதாகும்.

லதா : அண்ணணின் பாதையில் வெற்றியை காணலாம், தர்மமே கொள்கையாய் நாளெல்லாம் காக்கலாம். அடடடா என்ன பிரமாதம். தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம். அடடடா என்ன அர்த்தம்! என்ன கொள்கை!!

எம்.ஜி.ஆர். : இருங்க... இருங்க இப்ப யார பாராட்டுறீங்க?

லதா : அடடே நீங்களா . . .? என்ன தத்துவங்க! ரொம்ப பிரம்மாதமா பாடிட்டீங்களே!

எம்.ஜி.ஆர். : மன்னிக்கனு . .

லதா : ஏங்க?

எம்.ஜி.ஆர். : அத நான் பாடலீங்க. பாடினது பாரதியார் மகாகவி . . . அவர் ஒரு தமிழ் கவிஞர். தமிழருடைய நெஞ்சங்களிலெல்லாம் சுதந்திர உணர்ச்சியை தூண்டிவிட்ட புதுமை கவிஞர்.

லதா : அது எனக்கு தெரியுங்க. ஆனா அந்த ***மறைஞ்ச கவியோட கருத்துக்களை மக்கள் மத்தியில எடுத்துச் சொல்லி, அவரோட புகழை மங்காம வச்சிருக்கீங்களே*** *அதுக்காகத்தான் உங்கள பாராட்டுனேங்க.*

எம்.ஜி.ஆர். : நன்றிங்க . . .

லதா : அய்யோ என்னஙக நீங்க? நீங்கபாட்டுக்க போயிட்டே இருக்கீங்களே, உங்ககிட்ட சொல்ல வேண்டிய அயிட்டம் ரெண்டு மூணு பாக்கி இருக்குங்களே . . .

எம்.ஜி.ஆர். : அயிட்டமா?

லதா : ஆமாங்க . . . அதாவது உங்களை அஞ்சாறு ரவுடிங்க அடிக்க வந்தாங்கள்ள? அவுங்களை இந்த சாட்டையால சுத்தி சுத்தி அடிச்சி வெறட்டுனீங்களே அதுக்கு ஒரு பாராட்டுங்க . . . அப்புறங்க இந்த . . .

எம்.ஜி.ஆர். : இருங்க . . . இருங்க

லதா : என்னஙக . . .

எம்.ஜி.ஆர். : இது பாராட்டுற விசயம் இல்லீங்க வேதனை படவேண்டிய விசயம், பேசிட்டே வாங்க.

லதா : இதோப்பாருங்க உங்களுடைய எண்ணங்கள், உங்களுடைய செயல் எல்லாமே புரட்சிகரமா



இருக்குங்க. மத்தவங்கள பத்தி எனக்கு தெரியாதுங்க, ஆனா நீங்க இந்த ஊருக்கு வந்தத நான் ரொம்ப மகிழ்ச்சியோட வரவேற்கிறே. ஆமா நீங்க யாருங்க?

எம்.ஜி.ஆர். : நான் ஒரு நாடோடி. ம்ம் நீங்க?

லதா : அதோ பாருங்க அந்த கடல்ல ஒரு சின்ன தீவு தெரியல?

எம்.ஜி.ஆர். : தெரியலயே

லதா : நல்லா பாருங்க . .

எம்.ஜி.ஆர். : எப்படி பார்த்தாலும் தெரியலயேம்மா

லதா : சரிங்க அந்த கடல்ல ஒரு சின்ன தீவு இருக்குறதா நெனச்சிக்கங்க, அந்த தீவுல ஒரு சின்ன வீடு இருக்குறதா நெனச்சிக்கங்க, அந்த வீட்ல நான் இருக்குறதா நெனச்சிக்கங்க . . . .

வசனங்களின் தன்மை

ஒரு படத்தின் வசனம் என்பது 1. பேசுவோரின் சிந்தனை மற்றும் செயல்பாட்டை விளக்குவதாக அமைய வேண்டும். 2. கதையை அடுத்த கட்டத்துக்கு முன்னகர்த்திச் செல்வதாக இருக்க வேண்டும். 3. கதையின் கருவை விளக்கிச் செல்வதாக அமைய வேண்டும். கதைப் பொருளில் இருந்து விலகிச் செல்ல கூடாது.

படகோட்டியில் சந்தையில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் வந்திருந்து மீன் விலை சொல்வது கதையை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறது. இவர்கள் இருவருக்கு இடையிலும் இருக்கும் காதலும் குப்பத்துக்கு நன்மை விளைவிக்கும்

நோக்கமும் தெளிவாகிறது. அதேசமயம் நீலமேகம் முதலாளிக்கு அதிக இலாபம் கிடைத்து விடக்கூடாது என்ற நோக்கில் இருவரும் செயல்படுவதும் தெளிவாகிறது. இதனைப் புரிந்துகொண்ட நீலமேகம் முதலாளி மறுநாள் சுறா மீன் குப்பத்து மீன் விலையைக் கூடை 5 ரூபாய் என்று குறைத்தார். அடுத்த குப்பத்தின் மீன்களை வேண்டாம் என்று மறுத்து விடுகிறார்.

முதல் நாள் மகிழ்ந்த திருக்கை மீன் குப்பத்தினர் இன்று கலங்குகின்றனர். எம்.ஜி.ஆரின் மீதான நம்பிக்கை இங்குக் கேள்விக்குறி ஆகிறது. இந்நிகழ்வு அவர்களுக்கான நன்மையைச் செய்வதில் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட தடைக்கல் ஆகும்.

எம்.ஜி.ஆர். கதாபாத்திரமும் வசனங்களும்

படகோட்டியில் தலைவனாக மக்களின் நம்பிக்கையைப் பெற எம்.ஜி.ஆர். தனது



மக்களுடனேயே போராடுகிறார். எதிரியாக வரும் நீலமேகம் ஒரு புறம் அவ்வப்போது தன்னை நம்பாத மக்கள் ஒரு புறம் என எம்.ஜி.ஆரின் தவிப்பையும் போராட்டத்தையும் புலப்படுத்தும் வகையில் உரையாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவரது கதாபாத்திரம் இப்படத்தில் வெகு நேர்த்தியுடன் செதுக்கப்பட்டுள்ளது. மீனவ நண்பன் படத்தில் மக்கள் எம்.ஜி.ஆருக்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். அவர் சொல்வதே வேத வாக்கு. ஆனால் படகோட்டியில் அவர் குப்பத்தினரே அவரைத் தவிக்க விடுகின்றனர். 'நான் எடுக்கும் முயற்சி எல்லாம் எப்படி எப்படியோ வீணாகுது' என்று எம்.ஜி.ஆர். கலங்கிப் பேசும் வசனம் அவரது தவிப்பை உணர்த்துகிறது. இது காலம் செய்த மாற்றம்.

மீனவ நண்பன் படத்துக்கு வசனம் எழுதும்போது அவரது கதாபாத்திரத்துக்கு இயலாமை, தவிப்பு போன்றவை கிடையாது. செயல் ஊக்கம், வினைத்திட்பம் போன்ற அவருடைய சிறப்பான பண்புகளை விவரிக்கும் வகையில் வசனங்கள் எழுதப்பட்டன. இந்த வசன அமைப்புகளின் மாற்றங்கள் எம்.ஜி.ஆருடைய மக்கள் செல்வாக்கின் வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

நகைச்சுவை வசனம்

ஒரு படத்தில் வசனங்கள் கதாபாத்திரங்களின் பண்பை விளக்குவனவாக அமையவேண்டும். மீனவர் சங்கத் தலைவனாக நடிக்கும் நாகேஷ் கடல் நீருக்குள் விழுந்ததும் அவர் இறந்துவிடுவார் என்று கருதிக்கொண்டு காரியதரிசியாக இருக்கும் வீரப்பா 'ஹாய் அடுத்த தலைவர் நான் தான்' என்பார். இந்த

ஒரு ஒரு வரி வசனம் மனிதர்களின் உள்மன நோக்கத்தை பிரதிபலிப்பதாக அமைந்தது என எம்.ஜி.ஆர். அந்த இடத்திலேயே அவருக்கு ஐ நூறு ரூபாய் ஊக்கத் தொகை அளித்தார்.

குணச்சித்திர நடிகர்களுக்கான வசனங்கள்

கதாநாயகன் வில்லன் நகைச்சுவை நடிகர் தவிர மற்ற கதாபாத்திரங்களுக்கும் ஏற்ற வகையில் உரையாடல்களும் வசனங்களும் இடம் பெறுவதே படத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

படகோட்டியின் முதல் காட்சியில் முருகன் கோயிலில் எம்.ஜி.ஆரின் அப்பாவாக நடிக்கும் திருப்பதி சாமி,

‘உலகத்து உயிர்கள் எல்லாம் இன்பமாய் வாழ நீ தான் அருள் செய்யணும்’

என்று முருகனிடம் வேண்டுவார். இந்த வசனம் இவர் பொதுநல விரும்பி என்பதை சுட்டுகிறது.



அடுத்த காட்சியில் சுறா மீன் குப்பத்தின் துர்க்கை அம்மன் கோயிலில் பூஜை நடக்கும். அப்போது குப்பத்தின் தலைவர்,

'அம்மா பராசக்தி, பாத்ரகாளி,

நீ ரொம்ப கோபக்காரி. எங்க குப்பத்தோடு போட்டி போடுற குப்பத்துக்காரன்களை உன் கோபத்தால அழிக்கணும். ஆனால் உன் குப்பத்துக் குழந்தைகளை நீ வாழ வைக்கணும் தாயி''

என வணங்குவார். இந்த வசனம் இவர் சுய நலக்காரரர். பகைமை உணர்வுடையவர் என்பதை உணர்த்துகிறது. இதுவே ஒரு வசனம் என்பது கதாபாத்திரப் பண்பை விளக்க உறுதுணை புரிவதற்கான எடுத்துக்காட்டாகும்.

இக்காட்சிகள் இரண்டு குப்பத்தின் கருத்து வேறுபாட்டை மையமிட்ட கதை என்பதை ரசிகர்களுக்கு தெளிவாக்குகிறது.

மீனவ நண்பன் படத்தில் முதல் காட்சியில் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் இடையே நடக்கும் உரையாடல் பசியின் கொடுமையைப் புரிந்துகொள்ளாத ஆணவம் பிடித்த பணக்காரர்களின் மெத்தனப் போக்கை உணர்த்துகிறது.

நம்பியார் : யார் நீ?

எம்.ஜி.ஆர் : உழைப்பவன் உயரனும், அவன் வாழ்வு செழிக்கனுங்குற சிறப்பான கொள்கை உடைய சாதாரண மனிதன்.

வி.கே.ஆர் : என்ன தத்துவம் பேசுற?

எம்.ஜி.ஆர் : இது தத்துவம் இல்ல. உருவாகிக்கிட்டு வருகிற எதிர்கால சரித்திரம்.

நம்பியார் : சரி சரி இப்ப எதுக்கு இங்க வந்த?

எம்.ஜி.ஆர் : இந்த ஏழைக்கு நியாயம் கேட்க

வி.கே.ஆர் : ஓகோ, அவனுக்காக பரிஞ்சு பேச வந்திருக்கியா நீ?

எம்.ஜி.ஆர் : உங்க பதிலையும் தெரிஞ்சிக்க வந்திருக்கேன். அங்க பாருங்க, உங்க ஆடம்பர வாழ்க்கைக்காக தன் உழைப்பையே உங்களுக்கெல்லாம் சாசனமாக எழுதி கொடுத்திருக்கானே தெளிவா பாருங்க உங்கள எல்லாம் செல்வத்தில மிதக்க வைக்க தான் சேத்துல புரண்டுக்கிட்டு கிடக்கிறானே அந்த ஏழையப் பாருங்க. வறுமையைத் தான் சுமந்துக்கிட்டு நீங்கெல்லாம் சுகம் அனுபவிக்க, தன் ரத்தத்த வியர்வையா உங்க காலடியில ஓட விடுறானே அந்த பரிதாபத்துக்குரிய ஜீவன நல்லா பாருங்க. அவன் என்ன செய்யக் கூடாத குற்றத்த செய்தான்னு இப்படி மிருகத்தனமா அடிச்சீங்க.

வி.கே.ஆர் : அவன் திருடுனான்

எம்.ஜி.ஆர். : எதத் திருடுனான்? உங்க சொத்தையா, சுகத்தையா, சொகுசான வாழ்வையா? எதைய்யா திருடுனான்?

நம்பியார் : மானம் வெட்கம் இல்லாம அவன் சோத்தையே திருடிருக்கான்.

எம்.ஜி.ஆர் : இல்ல, ரத்திரி பகல்னு பாக்காம வெயில்ல உருகி, மழையில கரைஞ்சி உங்க வசதிய

பெருக்க பாடுபடுறானே அந்த தொழிலாளி அவனது ஓயாத உழைப்புக்கு எதிர்பாக்கிற கூலி போதும். அதுகூட அவனுக்கு கிடைக்காத போது தன் பசிய தனிச்சிக்க கேவலம் இரண்டு சப்பாத்திய எடுக்கிறது குற்றமில்ல, திருட்டு இல்ல அது அவனது உரிமையும்கூட.

வி.கே.ஆர். : நீ அதிகப்பிரசங்கித்தனமா பேசுறத நாங்க கேட்க தயாராயில்ல. வெளிய போறியா இல்லயா நீ.

எம்.ஜி.ஆர். : நான் நெனச்சத சாதிக்காம இந்த இடத்தவிட்டு நகரவேமாட்டேன்.

வி.கே.ஆர். : டேய் யாருடா அங்கே? இவன கழுத்தப்புடிச்சி வெளியே தள்ளு.

எம்.ஜி.ஆர். : நான் எரியும் நெருப்பு, என்ன யாரும் நெருங்க முடியாது.

வி.கே.ஆர். : ஓகோ இரு வர்றேன்



நம்பியார் : நீ நெருங்குனா தாங்கமுடியாது.

எம்.ஜி.ஆர். : அந்த சந்தர்ப்பத்த இப்பவே ஏற்படுத்திக்கிறதுனா நான் தயார்.

வி.கே.ஆர். : டேய் இனிமே உன்னோட இந்த துப்பாக்கிதான் பேசும்.

நிர்மலா : அப்பா! என்னப்பா இது.

வி.கே.ஆர். : நில்லுமா இவன் உயிர் என் கையாலதான் போகனும்னு இருந்தா நீ எப்படி தடுக்க முடியும்.

எம்.ஜி.ஆர். : ஐயா பெரியவரே இந்த சலசலப்புக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். துப்பாக்கியால சுடப்பட்ட அனுபவம் எனக்கு ஏற்கனவே உண்டு. எம்மேல ஒரு சிறு துரும்பு பட்டாலும் விளைவு என்ன ஆகும் தெரியுமா?

வீரப்பா : சம்மந்தி என்ன இது ரகள போங்க ரிவால்வரை உள்ளே வச்சுட்டு வாங்க. உனக்கு என்னப்பா வேணும்.



எம்.ஜி.ஆர். : எனக்கா? இந்த ஏழை அந்த நாற்காலியில உட்காரனும், உங்களப்போல அவனுக்கும் மேஜையில சாப்பாடு பரிமாறனும். அத ரசிச்சி இவன் வயிறார சாப்பிடனும், இப்ப எனக்கு இதுதான் வேணும்.

வி.கே.ஆர். : இவன் நாற்காலியில உட்காரனுமா?

நம்பியார் : மேஜ மேல சாப்பாடா?

நிர்மலா : இரண்டு பேரும் கொஞ்ச பேசாம இருங்களே. என்னங்க அவர இந்த நாற்காலியில உட்கார வைங்க நானே பரிமாறுரேன்.

எம்.ஜி.ஆர். : உங்க தாய் உள்ளத்துக்கு நன்றிம்மா. பசியோட இருக்குற ஒருத்தன் சாதத்த அள்ளி அள்ளி அனுபவிச்சு சாப்பிடுறத பாக்கும்போது கல் மனசு கூட கரைஞ்சு போயிரும்மா வாய்யா,

(ஆனால் அதற்குள் அந்த ஏழை இறந்து விடுவார்.)

அனைவரும் : இறந்துட்டானா !!!!!!

எம்.ஜி.ஆர். : இல்ல பட்டினிங்கிற நரக வேதனையில இருந்து அவன் விடுதலைப் பெற்றுட்டான். உங்க முதலாளி வர்க்கத்தின் கணக்குப்படி ஒருப் பிடி சோத்துக்கு என்ன விலை தெரியுமா? ஒரு உழைப்பாளியோட உயிர். நாய்க்கு வீசி எறியுற எச்சல் இலையில இருக்கிற மிச்ச சோறு கூட இலட்சக்கனக்கான, கோடிக்கனக்கான என் உடன்பிறப்புகளுக்கு கிடைக்கலனா நாம வாழுறது இந்த சமுதாயத்துல இல்ல பாலைவனத்துல. நாம வசிக்கிறது மனிதர்கள் மத்தியில இல்ல அரக்கர்கள் நடுவுல.

“ஈரமுள்ள நெஞ்சங்களே இந்த ஏழைகளுக்காக கண்ணீர் சிந்துங்கள், இதயமுள்ள மனிதர்களே இந்த கொடுமைகளுக்கு ஒரு முடிவு கட்டுங்கள்”.

இந்தக் காட்சியில் எம்.ஜி.ஆரிடம் வில்லனை விட அதிகமாக உரையாடுவது குணச்சித்திர நடிகரான வி கே இராமசாமி. அவருடைய கதாபாத்திரப் பண்பை விளக்கும் வகையில் இந்த வசனங்கள் இடம் பெற்றுள்ளன. ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையில் உள்ள இணைப்புப் பாலமான பசியின் தாக்கத்தை இந்த உரையாடல் காட்சி தனது மையப் பொருளாகக் கொண்டுள்ளது. ஏழையின் தகுதி பணக்காரனுக்குரிய அந்தஸ்து ஆகியவையும் இந்த காட்சியில் விவாதிக்கப்படுகின்றது ஆனால் ரசிகர்கள் மனதில் முதல் காட்சியில் காட்டப்பட்ட ஏழையின் மரணம் பட்டினி சாவா? அடித்து கொன்ற சம்பவமா? என விவாதத்தை எழுப்புகிறது. படம் விறுவிறுப்பாகத் தொடங்கிவிட்டது.



ரசிகர்களின் சிந்தனையைத் தூண்டும் உரையாடல்

இரண்டு படங்களிலும் ஒரு நல்லவன் அநியாயமாகக் கொல்லப்படும் காட்சி முதல் காட்சியாக அமைந்தது. அதைத் தொடர்ந்து அக்கொலை ஒரு விவாதப் பொருளாகி உரையாடலும் நிகழ்கிறது. படத்தின் விறுவிறுப்பான தொடக்கத்துக்கும் ரசிகர்களின் பங்கேற்புக்கும் உரையாடல் உதவுகிறது. படம் பார்ப்பவர் மனதில் ஏராளமான கேள்விகளை எழுப்பிவிடுகிறது. இந்தக் காட்சிகளில் உரையாடல் இல்லாமல் இருந்தால் இக்காட்சிகள் ஒருமுனைப்படுத்தப்பட்ட சிந்தனைப் போக்குடையதாக அமையாது. உரையாடல்களே படம் பார்ப்பவர்கள் சிந்திக்க வேண்டிய பாதையை வகுத்து தருகிறது. இதுவே உரையாடலின் வெற்றி ஆகும். இதுவே எம்.ஜி.ஆரின் கொள்கை அண்ணா திமுகவின் கொள்கை என்ற கதையின் மையக்கருத்தை ரசிகர்களுக்கு தெளிவாகி விடுகிறது.

விவரம் குறைந்தவர்களுக்கான வசன அமைப்பு

ஒரு படத்தின் வசனம் அல்லது உரையாடல் என்பது கதாபாத்திரங்களின் சமூகப் பொருளாதார கொள்கை ரீதியான பின்புலத்தையும் விளக்குகின்றது. படகோட்டி படத்தில் நாகேஷிடம் மனோரமா தனக்கு வந்திருக்கும் வாழ்த்து மடலைக் கொடுத்து வாசிக்கச் சொல்லும்போது அவர்களின் பின்புலம் புலப்படும் வகையில் சொற்கள் உரையாடலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நாகேஷ் : நீ அப்பவே வந்துட்டியா?

மனோரமா : ஆமய்யா வந்துட்டேன். இந்த உலகத்துக்கு வந்து பதினெட்டு வருஷமாச்சு, ஏய்யா யோவ் இது என்னய்யா சங்கமாய்யா இது?

நாகேஷ் : ஏன் ஏதாவது நடந்ததா அசிங்கம்

மனோரமா : அசிங்கமா? பார் இத எனக்கு வரவேற்பு பத்திர வாசிச்சிருக்காங்கய்யா உன் பசங்க

நாகேஷ் : வாசிச்சாங்களா? முற தவறமாட்டாங்களே

மனோரமா : அடச்சே படிச்சு பாத்துட்டு மூட்டப்பூச்சி மருந்த நீ திண்ணு, முழக்கயிற நான் தேடிக்கிறேன்

நாகேஷ் : என்னது ! வருக வருக மாதர்சங்க தலைவியே வருக, ஆகா பசங்க மரியாத தெரிஞ்ச பசங்க

மனோரமா : மண்ணாங்கட்டி மேல படிச்சு பாரு.

நாகேஷ் : ஆடாத மயிலே வருக, பாடாத குயிலே வருக, வாடாத மலரே, தேடாத பொக்கிஷமே, சீச்சீச்சீ என்ன வரவேற்பு பத்திரமா எழுதியிருக்கானுக வசிய மந்திரமில்ல எழுதியிருக்கானுக

மனோரமா : பாத்தியா

நாகேஷ் : ஆனா தெரியாத பயலுக எல்லாம் மானாவாரியா எழுத ஆரம்பிச்சிட்டாங்களே. சேலையக் கண்டதும் செந்தமிழ் விளயாட ஆரம்பிச்சிருச்சா? தோட்டத்துப்பக்கம் சீட்டியடிக்கிற பசங்களயெல்லாம் இந்த சங்கத்துல சேக்காதடான்னு இந்த விறால் பயகிட்ட . . . சீச்சீ அந்த பயலே சரியில்ல, சரி சரி ஏதுக்கு இது எங்கிட்டயே

இருக்கட்டும். முதல்ல அந்த பயலுகள என்னன்னு கேட்டுட்டு வர்றேன்.

மனோரமா : வேண்டாய்யா . . .

நாகேஷ் : தடுக்காதே

படிக்காத மீனவர்கள் தப்பும் தவறுமாக அல்லது கேலியும் கிண்டலுமாக மனோரமாவுக்கு எழுதியிருக்கும் காதல் கடிதம் அவர்களின் அறிவை புலப்படுத்துகின்றது.

மீனவநண்பன் படத்திலும் மூணு சீட்டு ஆடும் நாகேஷும், கிளி ஜோசியம் பார்க்கும் அவரது தந்தை தேங்காய் சீனிவாசனும் சச்சுவுடன் பேசுகின்ற வசனங்கள் அவர்களின் வாழ்க்கைப் பின்புலத்தை சுட்டிக்காட்டுகின்றன.

சச்சு : ரத்தினம் . . . .

நாகேஷ் : ஆஹா என்ன ஒய்யாரமா கூப்புடுற. எனக்கு நிச்சயமா தெரியும், இந்த வீட்டுக்குள்ள நுழயும்போது நீ எம்பேர தான் சொல்லி கூப்புடுவன்னு.

தேங்காய் சீனிவாசன் : [தன் இரு கைகளையும் முறுக்கிக்கொண்டு நிற்பார்] அடேய் இந்த கை வெவகாரம் அப்படியே நிக்குது இதுக்கு முடிவு கட்டாம அவகிட்ட என்னடா ஒட்ற.

நாகேஷ் : அடடே இந்த தேவதைய பாத்தவுடன இத மறந்தே மறந்துட்டேன். இந்தாம்மா இதப்பாரு இந்த கைய நல்லா பாரு நீயே சொல்லு இது கொளஞ்சிருக்கா இல்ல பெனஞ்சிருக்கா?

சச்சு : என்ன கண்ட்றாவி கஞ்சா கசக்குற மாதிரி இருக்கு, ஆமாம் அப்பா மகனுக்குள்ள என்ன தகறாரு.

நாகேஷ் : வெளக்கேத்தி வைக்க ஒரு ஆள் தேவ.

சச்சு : அதுக்கு நான் என்ன செய்யனும்

தேங்காய் சீனிவாசன் : நீ தான்மா வத்திவைக்கனும்

நாகேஷ் : ச்சீ. . நீதாம்மா பத்தவக்கனு

சச்சு : பத்த வைக்கனுமா? நீங்க என்ன சொல்றீங்க எனக்கு ஒன்னும் புரியல

இருவரும் கோரசாக : முத்தம்மா. . . . முத்தம்மா. . . .

நாகேஷ் : எங்கிட்ட வம்பு பண்ணனுங்குறதுக்காகவே நீ என்ன பெத்துருக்க

தேங்காய் சீனிவாசன் : எங்கிட்ட வம்ப வளக்கனும்னே நீ எனக்கு பொறந்தடா, ஏன்டா நமக்குள்ள தகறாரு அவளயே கேட்டுருவோம்

நாகேஷ் : கேளு

தேங்காய் சீனிவாசன் : ஏம்மா எங்க ரெண்டு பேருக்குள்ள உனக்கு யார பிடிக்குது

சச்சு : எனக்கா?

நாகேஷ் : ஒன்னு அவசர இல்லம்மா, நிதானமா யோசன பண்ணி சொல்லு. நீ சுமங்கலியா இருக்கனும், மஞ்சள் குங்குமத்தோட இருக்கனும், இதோ இருக்குதே அதுக்கு அம்பதெல்லாம் தாண்டிபோய் இப்போ ஒன்னோ ரெண்டோ ஓடுது.

தேங்காய் சீனிவாசன் : ஓடுதுடா இல்லன்னா நான் சொன்னேன். ஆனா வாலிப முறுக்கு கொறஞ்சதா?

நாகேஷ் : ஆ ஆ மீசய்ய முறுக்குனா வாலிப முறுக்கு

தேங்காய் சீனிவாசன் : அவன் ஒடம்ப பாரு பூஞ்ச ஒடம்பு, ஊதுனயின்னா பறந்துருவா. ஏ ஒடம்ப பாத்தியா வைரம்பாஞ்ச ஒடம்பு

நாகேஷ் : ஒடம்பா முக்கியம், ஏய் இப்படி வா. முடிவு சொல்றவரைக்கும் அத்தவுடேன்

தேங்காய் சீனிவாசன் : ஏய் என்னடா மெறட்டுர என்னது?

நாகேஷ் : [தனியாக அழைத்துக்கொண்டு போய்] வருவிய்யா . . . இதப்பார் அதோட முடிவு எனக்கு சாதகமா ஏதாவது சொல்லிடுச்சுன்னா அதக்கேட்டு உடனே நெஞ்சு திக்குனு அடச்சுப்போச்சுனு முழி பிதுங்கி வருத்தப்படாம 'பைய்யா பைய்யா



நல்லாபடிய இருடா, அந்த பொண்ணு கண்ணு கலங்காம பாத்துக்கனு' அப்படினு வாயார ரெண்டு வார்த்த வாழ்த்திட்டு எங்கள உட்ரேன்.

தேங்காய் சீனிவாசன் : [கேலியாக சிரிச்சிக்கிட்டே,] அது இல்ல ரத்தினம் அவளோடு முடிவு எம்பக்கம் சாதகமா இருந்துதுனு வச்சுக்கோ . . .

நாகேஷ் : ஹா ஹா நல்லா அலயிரேயே கெடந்து . . . .

தேங்காய் சீனிவாசன் : டேய் பெத்த அப்பனுக்கு கல்யாணம் நடக்குறப்போ அவங்க புள்ள இருக்குறான்னா அதுக்கே குடுத்து வச்சிருக்கனுடா

நாகேஷ் : எதுக்கு . . .

தேங்காய் சீனிவாசன் : ஏன்டா ரத்தினம் நா இப்போ என்ன கேட்டுட்டே

நாகேஷ் : பொண்ணயே கேக்கிறயே

தேங்காய் சீனிவாசன் : குடுன்றேன். எங்க ரெண்டு பேருக்கு கல்யாணம் நடந்தவுடனயே, 'நயினா நயினா ஏதோ வயசு வித்தியாசத்துல கல்யாண நடந்துபோச்சு அந்த பொண்ண கண்ணு கலங்காம பாத்துக்கங்க, நீங்களு கண்ணு கலங்காம இருங்க அப்படினு நாலு வாழ்த்து வாழ்த்திட்டு நீ நேரா போயிடே எதுக்கு நீ இங்க?'

நாகேஷ் : என்னது உங்கள தனியா விட்டுட்டு நான் போயிடனுன்ற?

தேங்காய் சீனிவாசன் : ஆமான்டான்றே . . . நல்லாயிருக்குல

நாகேஷ் : பரவாயில்லயே சுமாரா இருக்கு

சச்சு : என் முடிவு தயார்.

இருவரும் : முடிவு தயாரா என்ன என்ன . . . ?

நாகேஷ் : இதோ இந்த கிழந்தானே உனக்கு மாமனாரு?

தேங்காய் சீனிவாசன் : ஏம்மா நீயே செல்லு இவனுக்கு நீதான சின்னம்மா?

நாகேஷ் : ச்சூ வா மாமனார் கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கிறலா விழு

சச்சு : இருங்க இருங்க ஏ முடிவ நான் சொல்லிக்கிறே (தேங்காய் சீனிவாசனை காட்டி) எனக்கு இவரதான் பிடிச்சிருக்கு

நாகேஷ் : இந்தா . . இந்தா . . கைய விடு ஒரு நிமிஷ கைய விடு

தேங்காய் சீனிவாசன் : எதுக்குடா?

நாகேஷ் : பிடிச்சிருக்குனு சொன்னவுடனே கையபுடிச்சிறதா? இந்த பாரும்மா எங்க அப்பாவ பிடிச்சிருக்கு ரொம்ப சந்தோசம். ஆனா நீ கல்யாணம் பண்ணிக்க போறியே அது என்னையா? என்ன பெத்துட்டு நிக்குதே இதய்யா?

சச்சு : தேங்காய் சீனிவாசனை காட்டி, இவரதான்.

நாகேஷ் : ஆ!!!!!!!!!!!!

அக்காலகட்டத்தில் ஒரு அரசியல் தலைவர் வாழ்வில் நடந்த இந்த அவல நிகழ்வை சுட்டிக்காட்டவே இந்த

நகைச்சுவைக் காட்சி சேர்க்கப்பட்டதாக தகவல்கள் வந்தன.

ஆக இதுவும் ஒரு அரசியல் பிரச்சாரமாக எம்.ஜி.ஆருக்கு உதவியது.

இவ்விரு படங்களிலும் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் பேசுகின்ற வசனங்கள் மிகத் தெளிவான கருத்துடன் அவர்களின் உள்நோக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. படகோட்டி படத்தில் எம்.ஜி.ஆர். இன் குப்பத்தை சேர்ந்த மக்கள் எம்.ஜி.ஆரின் காதலை ஆதரிக்காத போது அவருடைய உள்நோக்கத்தை லட்சியத்தை புரிந்துகொள்ளாதது, அவரை ஏசும்போது “அப்பப்பா எவ்வளவு கஷ்டப் பட்டிருக்க காதலியைத் தேடி கடலுக்குள்ள போன, படகுப்போட்டியில ஜெயிச்சு மீன் பிடிக்கிற உரிமையை அவுங்களுக்கு விட்டுக் குடுத்த.” என்று பேசுகின்ற வசனங்கள் ஏழை மக்கள் மனதில் நல்லதைச் செய்பவர் மீது கூட மாக்கள் நம்பிக்கையற்று இருப்பதனை புலப்படுத்துகின்றன.

படகோட்டியில் எம்.ஜி.ஆரின் பொது வாழ்வுக்கும் தனி வாழ்வுக்கும் இடையிலான குழப்பங்களை உரையாடல்கள் செவ்வனே வெளிப்படுத்துகின்றன. இதே சிக்கல் அடையப்பனுக்கும் உண்டாகிறது. இருவருமே தனி வாழ்வின் நலன்களை இழந்து விடத் துணிந்தனர். பொது வாழ்வின் மேன்மையையே விரும்புகின்றனர். நீலமேகத்துடன் திருமணம் என்று பேசி முடிவானதும் எம்.ஜி.ஆரைப் பார்க்க வந்த சரோஜாதேவியிடம் அவர்

எம்.ஜி.ஆர். : ஆமா இப்ப ஏன் வந்த உன் அப்பாவுக்கு தெரியுமா?

சரோஜாதேவி : தெரியாது, தெரிய வேண்டிய அவசியமுமில்ல. சுடு மணல்ல துடிக்கிற மீன் மாதிரி அங்க என்னால இருக்க முடியல, வந்துட்டேட

எம்.ஜி.ஆர். : முத்து எவ்வளவு பெரிய தவறு செய்துட்ட, சொல்லாம வரலாமா? இது நல்ல பண்பா? ஏற்கனவே இருக்குற பகை இன்னும் அதிகமாகாதா? நான் ஒற்றுமைக்காக பாடுபட்றதெல்லாம் எப்படி எப்படியோ விரயமாகுதே.

சரோஜாதேவி : என் தெய்வத்தை தேடி நான் வந்தது தவறா? வாழ விடாத அப்பனையும் மீறக்கூடாது, வாழ விரும்புற இடத்துக்கு வரக்கூடாது, அப்போ ஒரு பெண்ணுக்கு என்னதான் முடிவு? அவ அழுது



அழுது சாக வேண்டியது தானா? சொல்லுங்க, நீங்களே எனக்கொரு ஒரு முடிவு சொல்லுங்க.

அப்போது அங்கு வந்த
குப்பத்து மக்கள் : சொல்றது என்னம்மா எங்க எதிரியோட மகன் நீ இருந்தாலும் எங்க நாட்டாம உயிரில்லையா? தம்பி உன்ன அழ விடுமா கவலப்படாத ஒன்னத்தா கட்டிக்குவாரு, அழாத.

எம்.ஜி.ஆர். : அண்ணே என்ன பேசுறீங்க?

கு.மக்கள் : உன் நடத்த அப்படி இருக்கு தம்பி, உன்ன நம்பி இருக்குற எங்களவிட இந்த பொண்ணுதான உனக்கு பெரிசா போச்சு.

எம்.ஜி.ஆர். : சடயா மொற தவறி பேசாத, என் எண்ணம் உங்களுக்கு தெரியுமில்ல?

கு.மக்கள் : ஏன் தெரியாது? காதலிய தேடி கடல்ல போய் விழுந்த, இந்த பொண்ணோட அப்பன காப்பாத்த எங்களையே அடிச்சு வெறட்டுன, கெழவனா இருந்து காதல வளக்க அப்பாடி எவ்வளவு கஷ்டப்பட்ட, எங்களுக்காக படகு போட்டில ஜெயிச்சு மீன் பிடிக்கிற உரிமைய அவங்களுக்கு விட்டுக்கொடுத்த, பொம்பள மோகம் தல நெறஞ்சு போச்சு.

எம்.ஜி.ஆர். : பழநி ஆத்திரத்தில மனம் போனபடி பேசாத, கொஞ்சம் சிந்திச்சு பாரு நானும் உங்களப்போல ஒரு மனுசந்தான, எனக்கும் ஆச, அன்பு, இன்பம், துன்பம், காதல், கவலை இதெல்லா இருக்காதா?, சொந்த வாழ்க்கையில உள்ள பற்றும் பாசமும் இயற்கையானது அதுக்கு என் இவ்வளவு பெரிய விபரீத அர்த்தம் கற்பிக்கிறீங்க. நான் முத்துவ

காதலிக்கிறேன். . . உண்மை, எனக்கு கல்யாண நடக்கனும்னா முத்துவை தவிர நா வேற யாரையும் கட்டிக்கப்போறதில்ல அதுவும் நிச்சயம். சொல்லுங்க காதல், கல்யாணம் இதெல்லா தவறா?

கு.மக்கள் : இந்த காதலும், இந்த கல்யாணமும் நிச்சயமா தவறுதான். அந்த குப்பத்துக்கும் நமக்கும் எவ்வளவோ வெட்டு குத்தெல்லாம் நடந்துருக்கு. அந்த குப்பத்துக்கூட உறவாடுறது பெருத்த அவமானம். ஒன்னு இந்த காதல மறக்கனும் இல்ல எங்கள மறக்கனும் இதுதான் உறுதி. இப்ப சொல்லு உன் முடிவ.

எல்லோரும் : ஆமா இப்போ சொல்லு உன் முடிவ.

எம்.ஜி.ஆர். : என் முடிவ சொல்லனுமா? சொல்றேன் இப்போ நான் பேசல என் உள்ளம் பேசுது. என்னோட ஒவ்வொரு வார்த்தையும் என் இரத்தத் துளியில இருந்து எழுதப்பட்டது. நான் வெறும் சுயநலக்காரங்கிற பழியே எனக்கு வேண்டாம். என் கடமை, இலட்சியம், என் மக்களோட நன்மை இது தான் எனக்கு முக்கியம், இதத்தான் எங்க அப்பாவும் எனக்கு சொல்லி தந்தாரு. அவர் உங்களுக்காக தன் உயிரையே கொடுத்தாரு, நான் உங்களுக்காக என் வாழ்வையே கொடுக்குறே, என் சொந்த இன்பம் இல்லாமலே போகட்டும். நீங்க விரும்பாத இந்த காதல் கல்யாணம் எனக்கு தேவையே இல்லை.

கு.மக்கள் : மாணிக்கம் அண்ணே என அனைவரும் காலில் விழுகின்றனர், கட்டிப்பிடிக்கின்றனர்.

சரோஜாதேவி : உங்களயே நம்பி வந்த எனக்கு இதுதானா கதி என் காதல் கருகிப்போக வேண்டியதுதானா? இது நியாயமா?

எம்.ஜி.ஆர். : முத்து என்ன மன்னிச்சிரு. நான் சாதாரண மனிதனாய் இருந்திருந்தா உன் காதலுக்காக என் உயிரயே கொடுத்திருப்பே முத்து. ஆனா நான் மக்களுக்குக் கட்டுப்பட்டவன், தலைவனுமில்ல தலைவங்கற பேர்ல மக்களின் அடிமை நான். என்ன மறந்துரு.

எம்.ஜி.ஆரின் வார்த்தைகள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கை

குப்பத்து மக்களுக்கு அவர்கள் பட்ட துயரங்கள் அவர்களுக்கு யார் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாமல் இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டன. ஆனால் நடைமுறையில் இவர்கள் அனைவரும் எம்.ஜி.ஆர். என்ற தனிமனிதன் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்தனர். படத்தில் மக்கள் நம்பிக்கையற்றுப் பேசும் வசனங்கள் ஆயிரத்தில் ஒருவனிலும், படகோட்டியிலும் இடம் பெற்றாலும் கூட நிஜவாழ்க்கையில் ஏழை மக்கள் எம்.ஜி.ஆர். மீது மிக உயர்ந்த மதிப்பும், மரியாதையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்டவர்களாக இருந்தனர்.

எம்.ஜி.ஆர். செய்வது அனைத்தும் சரி அவருக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற நன்றிக்கடன் உணர்வுடன் அவருடைய ரசிகர்கள் விளங்கினர். அவர் கட்சி ஆரம்பித்த பிறகு காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூட தங்களது கட்சியில் சிறந்த தலைவர்கள் இல்லாத காரணத்தினால் அண்ணா திமுக கட்சி மாறி அண்ணா திமுக விசுவாசிகள் ஆகி பின்னர் தீவிர தொண்டர்கள் ஆகிவிட்டனர்.

இன்றுவரை அண்ணா திமுகவின் வாக்கு வங்கியை அதிமுக தொண்டர்கள் நிலையாக வைத்துள்ளனர். 2019 அக்டோபரில் விக்கிரவாண்டி, நாங்குநேரி தொகுதிகளில் இடைத்தேர்தல் வந்தபோது அண்ணா திமுக 52.8 சதவீத வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய வெற்றியை கொண்டாடியது. 53 சதவீத வாக்கு என்பது எம்.ஜி.ஆர். மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்னும் சிதையாமல் இருப்பதையே உணர்த்தியது. ஒரு தலைவன் மீது அவனது மக்கள் அவ்வப்போது அவநம்பிக்கை கொள்வது இயற்கை. ஆனால் எம்.ஜி.ஆர். மீது மக்கள் ஒருபோதும் அவ நம்பிக்கை கொள்ளவில்லை என்பது உண்மை.

வசனங்களின் இனிமை

நல்ல வசனம் என்பது கேட்க இனிமையானதாகவும், ரசிக்கத்தக்கதாகவும், ஆழ்ந்த பொருள் உடையதாகவும் நினைத்து நினைத்து இன்புற தக்கதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு படகோட்டி படத்தில் சந்தையில் எம்.ஜி.ஆர்.



சரோஜாதேவியை சந்தித்து அன்றைக்கு மீன் விலையை இருவரும் போட்டி போட்டு உயர்த்திவிட வேண்டும் என்பதைச் சொல்வதற்காக குழாயடியில் ரகசியமாக சந்திக்கின்றார். குழாயடிக்கு வந்த பிறகு இருவரும் பேசும் சில வசனங்கள் காதலின் சுவையை மிகுதி படுத்துவதாகும்.

மீனவ நண்பனில் அக்காள் ஆரத்தி எடுத்து தங்கை லதாவையும் அவர் கணவர் எம்.ஜி.ஆரையும் வீட்டுக்குள் அழைத்து வந்து சாந்திமுகூர்த்த ஏற்பாடுகள் செய்து இருப்பார். அதை கண்டு மனம் பொறுக்காத அவர் தந்தையார் ‘இல்லாதவனுக்கு எதற்கு கட்டில் மெத்தை சோபா’ என்று சொல்லி அவற்றை அந்த அறையை விட்டு வெளியே கொண்டு வந்து போடச் சொல்வார். அங்கிருந்து கட்டில் மெத்தை சோபா எல்லாம் வெளியேற்றப்பட்ட பின்பு எம்.ஜி.ஆர். லதாவை சாந்தப்படுத்தும் விதமாக பேசும் வசனங்கள் இனிமையானவை.



நிறைவு

படங்களில் எம்.ஜி.ஆர். ஏழையாக இருந்து ஏழைகளுக்கு உதவுவதாக இருந்து பேசுகின்ற வசனங்கள் ஏழை மக்களோடு அவரை ஒன்றிணைத்து ஏழைப்பங்காளனாக உணரவைத்தது.

மற்றவர்கள் அவரைப் பற்றி பேசும் வசனங்கள் எம்.ஜி.ஆர். நல்லவர் வல்லவர் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளன. இதனை மக்களும் திரும்பத் திரும்ப கேட்க விரும்புவதால் அவர்கள் இப்படங்களை மீண்டும் மீண்டும் திரையரங்கில் வந்து பார்க்கின்றனர். மற்ற நடிகர்களின் படங்கள் திரையரங்குக்கு வராதபோது எம்.ஜி.ஆரின் படங்கள் மட்டும் கடந்த 70 ஆண்டுகளாக திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அண்மையில் [2019] தீபாவளிக்கு மறு வெளியீடாக வந்த எம்.ஜி.ஆர். நாடோடி மன்னன்



படம் மதுரையில் ஒரு வாரத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் வசூல் செய்தது. இவ்வாறு அவருடைய படங்களுக்கான சாதனைகளை அவருடைய படங்களின் வசூலை மீண்டும் அவர் படங்களின் வசூலால் மட்டுமே முறியடிக்க முடியும். வேறு நடிகர்கள் நடித்த படங்கள் வசூலில் வெற்றி பெற முடிவதில்லை. தவிர வேறு படங்கள் இத்தகைய பெரும் வசூலை பெறுவதில்லை.

எம்.ஜி.ஆர். படங்களில் பேசும் வசனங்களைக் கேட்கும்போது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையும் ஆறுதலும் தெம்பும் கிடைக்கின்றது. அந்த வசனங்கள் அவர்களே பேச விரும்பும் வார்த்தைகளாக, வசனங்களாக இருப்பதால் தங்களுக்குள் ஒரு மனத் திருப்தியை அடைகின்றனர். மேலும் எம்.ஜி.ஆர். படத்தின் வசனங்கள் செயலூக்கம் உடையனவாக இருக்கின்றன. அவர் படத்தின் கடைசியில் வெற்றி பெற்று தன்னுடைய கொள்கையில் வெற்றி அடையும் போது தன்னை எம்.ஜி.ஆரோடு இணைத்துப் பார்க்கும் ரசிகர்கள் தாங்களே அந்த வெற்றியைப் பெற்றதாக கருதி படம் பார்த்துவிட்டு வரும் வேளையில் அவர்கள் மிகுந்த உற்சாகம் கொண்டிருக்கின்றனர்.

படம் பார்த்த உற்சாகத்தின் விளைவால் ஒவ்வொருவரும் ஒரு எம்.ஜி.ஆரை போலவே வசனங்களைப் பேசிக் கொண்டும் பாடல்களைப் பாடிக் கொண்டும் திரையரங்கில் இருந்து வெளியே வருகின்றனர். அவர்களுக்கு இருக்கும் உற்சாகம் ஒரு தொற்று நோய் போல ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு தொற்றிக் கொள்கின்றது. இந்த உற்சாக போதையும் இவர்கள் மீண்டும் மீண்டும்

எம்.ஜி.ஆர். படம் பார்க்க தூண்டுகிறது. மீனவநண்பன், படகோட்டி படங்களின் உரையாடல்கள் எம்.ஜி.ஆருடைய திரையுலக வெற்றிக்கும் அரசியல் வெற்றிக்கும் உறுதுணையாக அமைந்ததைக் காண்கிறோம்.



4. படகோட்டி மீனவ நண்பன் பாடல்களின் ஒப்பீடு

எம்.ஜி.ஆர். நடித்த படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரண்டு படங்களும் சிறப்பான பாடல்களைக் கொண்டவை. இரண்டுமே ஒரே கதைக்களத்தை கொண்டவை என்பதாலும் இரண்டுமே மீனவர்களின் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் எடுக்கப்பட்டவை என்பதாலும் இரண்டிலும் அவர்களின் ஏழ்மை, அவர்களின் பரிதாப நிலை ஆகியவை முதல் பாடல்களில் வெளிப்பட்டிருக்கும்.

மீனவரின் தேசிய கீதம்

படகோட்டி படத்தில் வாலி எழுதிய “தரை மேல் பிறக்க வைத்தான் - எங்களைத் தண்ணீரில் பிழைக்க வைத்தான்” எனத் தொடங்கும் பாடல் மீனவர்களின் தேசியகீதம் என போற்றப்படுகிறது. இப்பாடல் அவர்களின் ஏழ்மை நிலையை மிகச்சரியாக புலப்படுத்தியது. மீனவ நண்பன் படத்தில் இது போன்றதொரு பாடல் இடம்பெறவில்லை.

“கரை மேல் இருக்க வைத்தான் -பெண்களைக்

கண்ணீரில் குளிக்க வைத்தான்”

என்று பல்லவியில் இடம் பெற்ற கரையில் வாழும் பெண்களும் கண்ணீரோடு தங்கள் கணவன்மார் உயிருடன் திரும்ப வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை உணர்த்தின.

"ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார்

ஒவ்வொரு நாளும் துயரம்

ஒரு ஜாண் வயிற்றை வளர்ப்பவர் உயிரை

ஊரார் நினைப்பது சுலபம்"

என்ற வரிகள் கடற்கரையோரத்தில் வாழும் மீனவர்கள் அலை கடலில் படகில் போய் மீன்பிடிக்கும் உயிருக்கு ஆபத்தான வேலையில் ஈடுபடுகின்றனர். ஆனால் தரையில் வாழும் மனிதர்கள் மீனவர்களின் உயிருக்கு இருக்கும் ஆபத்தை புரிந்து கொள்ளாமல் குறைந்த விலைக்கு மீனை வாங்குவதையும் சுட்டிக்காட்டுகின்றன.



கடலில் செல்லும் மீனவர்களுக்கு

“வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்

கடல்தான் எங்கள் வீடு

முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும்

இதுதான் எங்கள் வாழ்க்கை”

என்ற வரிகள் கடலுக்கு போவோர் திரும்பி உயிரோடு வருவர் என்ற நிச்சயம் இல்லை என்ற அவல நிலையை எடுத்துரைக்கின்றது. இன்றைக்கு தமிழக மீனவர்கள் கடலின் மர்மம் மட்டுமின்றி இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தலும் சேர்ந்து மிரட்டுகிறது. அதிகாலையில் கரையில் வந்து காத்திருக்கும் பெண்கள் மீனுக்காக மட்டும் காத்திருப்பதில்லை கணவன் உயிரோடு திரும்பி வருகின்றானா என்ற ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

ஆளுங்கட்சியின் அராஜகமும் அதிமுக தொண்டர்களும்

மீனவ நண்பன் படத்தில் இதுபோன்றதொரு தொழில் ரீதியான பாடல் இடம் பெறவில்லை. மாறாக பொதுவான ஏழைகளின் பிரச்சினை குறித்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மீனவ நண்பன் படம் எடுக்கப்பட்டு வரும் வேளையில் அண்ணா திமுக கட்சி தொடங்கி ஐந்து ஆண்டுகள் ஆன நிலையில் சட்டமன்ற தேர்தலுக்குத் தொண்டர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். ஊழலற்ற நிர்வாகத்தை எம்.ஜி.ஆர். தருவார் என்ற நம்பிக்கையோடு அவர்கள் காத்திருந்தனர்.

ஆளும் கட்சியான திமுக தன்னுடைய சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி அதிமுக

தொண்டர்களை ஒடுக்கியது. செயல்பாட்டை முடக்கியது. வந்தது. பொய் வழக்கு போட்டு காவல் நிலையத்தில் அடைத்து வைத்து அடித்து உதைத்தது. திமுகவில் அப்போது ஊழல் மலிந்துவிட்டது. மக்கள் வெறுப்பு அதிகமாயிற்று. எம்.ஜி.ஆரையும் அவருடைய அண்ணா திமுக கட்சியையும் நேரில் எதிர்க்காமல் அந்தச் சூழ்நிலையில் திமுகவினர் வேறு பல குறுக்கு வழிகளையும் கையாண்டனர். இதனா இக்கருத்தை மையமிட்ட பாடலாக மீனவ நண்பன் படத்தில்

"நேருக்குநேராய் வரட்டும்

நெஞ்சில் துணிவிருந்தால்

என் கேள்விக்கு பதிலை தரட்டும்

நேர்மை திறமிருந்தால்"

என்ற பாடல் இடம்பெற்றது. மீனவர் பிரச்சனை என்றில்லாமல் பொதுவாக ஏழை மக்களின் கொடுமை உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாத



நிலை இப்பாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

“பட்டினியால் தினம் ஒட்டிய வயிறு

பாதையில் தவிக்குதடா - சில

பாவிகள் ஆணவம் பஞ்சையின் உயிரை

தினம் தினம் பறிக்குதடா”

என்ற வரிகள் பட்டினிச் சாவுகளின் கொடுமையைக் கண்டிக்கும் வகையில் எழுதப்பட்டன. திமுகவுக்கு சவால் விடும் வகையில் அண்ணா திமுகவினரின் போர்க் குரலாக இப்பாடல் ஒலித்தது.

“மாறினால் மாறட்டும்

இல்லையேல் மாற்றுவோம்

தீமைகள் யாவையும்

கூண்டிலே ஏற்றுவோம்”

என்ற வரிகள் ஊழல் செய்யும் திமுகவினரை சட்டத்தின் கையில் ஒப்படைப்போம் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் உண்டாக்கின .

எம்.ஜி.ஆரும் பாரதியாரும்

திமுகவினர் பொதுவாக பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் வரிகளை தமது எழுத்திலும் வேறு பல கலைப் படைப்பிலும் எடுத்துக் காட்டுவது காட்டுவது வழக்கம். பாவேந்தர் பாரதிதாசனை திமுகவின் பிரச்சார கவிஞராகவே அக்காலகட்டத்தில் திமுகவினர் கொண்டிருந்தனர். பாவேந்தரின் பாடல் வரிகளை எடுத்துக் காட்டாமல் நாவலர் நெடுஞ்செழியனோ பேராசிரியர் அன்பழகனோ மேடைகளில் தன் பேச்சை முடித்தது

கிடையாது. ஆனால் அதிமுக ஆரம்பித்ததும் பாரதியாரின் வரிகளையும் பயன்படுத்தும்படி பாடலாசிரியர்களிடம் எம்.ஜி.ஆர். கேட்டுக் கொண்டதனால் பாரதியாரும் புத்துணர்வு பெற்றார்.

"தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால்

ஜகத்தினை அழித்திடுவோம் என்று

தமிழ்கவி பாரதி பாடிய பாட்டை

நடைமுறை ஆக்கிடுவோம்"

என்ற வரிகள் இடம்பெற்றன. கர்நாடகாவில் உள்ள ஒரு கிராமத்தில் இப்பாடல் வரிகளின் படப்பிடிப்பு நடந்ததனால் அங்கு பாரதியார் படம் கிடைக்கவில்லை, உடனே எம்.ஜி.ஆர். கலை இயக்குனர் அங்கமுத்துவை அழைத்து பாரதியார் படம் வரைந்து தரும்படி சொல்லி அப்படத்தை வைத்து அங்கு கிராம மக்கள் பாரதி விழா கொண்டாடுவதாக ஒரு காட்சியை உருவாக்கினார்.



பாரதியார் நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி எழுதியதால் அவரை காங்கிரஸ்காரர் என முத்திரை குத்தி திமுக புறக்கணித்து வந்த வேளையில் எம்.ஜி.ஆர். அவரை ஒரு தேசிய கவிஞர் எனப் போற்றி அவருடைய பாடல்களை தன்னுடைய படங்களில் பயன்படுத்திக்கொண்டார். இதனால் அவர் பார்ப்பனர் மற்றும் காங்கிரஸ் அனுதாபிகளின் வாக்குகளையும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார். எம்.ஜி.ஆர். முதல்வரானதும் பாரதியார் நுற்றாண்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார். அவருடைய படைப்புகள் அனைத்தும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. பாராளுமன்றத்தில் அவருக்கு சிலை எழுப்பப்பட்டது.

அதிமுகவின் இலட்சியப் பயணம்

அதிமுக தான் ஒரு சமூகநீதிக்கான கட்சி என்பதை உணர்த்தி ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரலாக இக்கட்சி விளங்கும் என்பதை திரைப்படம் பார்ப்பவரின் மனதில் புரியவைக்கும் முயற்சியில்

“நீதியின் தீபங்கள் ஏந்திய கைகளின்
லட்சியப் பயணமிது - இதில்
சத்திய சோதனை எத்தனை நேரினும்
தாங்கிடும் இதயமிது
அண்ணனின் பாதையில் வெற்றியே காணலாம்
தர்மமே கொள்கையாய் நாளெல்லாம் காக்கலாம்”



என்ற வரிகள் அறிஞர் அண்ணாவின் பாதையில் நடைபோடும் அண்ணா திமுக சமுக நிதி போற்றும் கட்சி என்பதை உணர்த்தியது. அதிமுக வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். முதல்வராகப் பதவியேற்ற பிறகு இப்படம் திரைக்கு வந்தது. எம்.ஜி.ஆர். ரசிகர்கள் இப்படத்தை தம் கட்சிக்கு கிடைத்த வெற்றியாகக் கொண்டாடினர்.. இதற்கு முன்பு எம்.ஜி.ஆர். படங்கள் திமுகவே ஆதரித்தால் உங்களுக்கு எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்ற கருத்தை எடுத்துரைத்தார். அண்ணா திமுக கட்சியை எம்.ஜி.ஆர். ஆரம்பித்த பிறகு எடுக்கப்பட்ட படங்களில் அண்ணா திமுக உங்களுக்கு ஊழலற்ற ஒளிமயமான எதிர்காலத்தை அளிக்கும் என்ற பிரச்சார கருத்தை எடுத்துக் கூறினார். இக்கருத்தை அவர் சொல்ல வேண்டியதேயில்லை. உள்ளளற்ற ஆட்சி தருவார் என்ற நம்பிக்கையில் தானே அவரது ரசிகர்களும் பொதுமக்களும் அவரை கட்சி தொடங்கும்படி தூண்டினர். தங்கள் பகுதியில் எம்.ஜி.ஆர். கட்சி கொடி என்று தம் விருப்பத்துக்கு ஏற்ப ஒரு கட்சிக் கொடியையும் ஏற்றினர். அதிமுகவின் வெற்றி ஒரு அதிசயம் அல்ல ஆனால் தன ஆயுள் உள்ளவரை எம்.ஜி.ஆர். அதைத் தக்க வைத்தது தான் அதிசயம்.

ஏழை பணக்காரர் வேறுபாடு

படகோட்டி படத்தில் ஏழைகள் பணக்காரர்களை வெல்லவெ முடியாது என்ற நம்பிக்கையில் மீனவர்கள் எம்.ஜி.ஆர். பேச்சை கேட்காமல் நீல மேகத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு படகை எடுத்துக் கொண்டு கடலுக்கு போய் விடுவார்கள். அப்போது ஒரு முதியவர்

மனச்சோர்வுடன் எம்.ஜி.ஆரிடம் ‘கடவுள் அவங்களுக்கு எல்லாம் கொடுத்திருக்கிறான், நமக்கு என்ன கொடுத்திருக்கிறான்’ என்று சொல்லி விட்டுச் செல்வார். அவர்களோடு மோதி மோதி வெற்றி பெற இயலாது என்ற இயலாமையை முதியவரின் வார்த்தைகள் வெளிப்படுத்தும். எம்.ஜி.ஆர். பாடலாக

“கொடுத்ததெல்லாம் கொடுத்தான்

அவன் யாருக்காகக் கொடுத்தான்

ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை

ஊருக்காகக் கொடுத்தான்”

என்ற பல்லவியுடன் கூடிய சமத்துவம் பற்றிய சிறப்பான பாடல் ஒன்றாக எடுக்கப்பட்டிருக்கும். இப்பாடலில் இவ்வுலகின் செல்வங்கள் அனைத்து மனிதருக்கும் பொதுவானவை என்ற சித்தாந்தத்தை எடுத்துரைக்கும். தனிநபர் பொருள் குவிப்பைக்



கடுமையாக எதிர்க்கும். ஏறத்தாழ இதற்கு நிகரான ஒரு பாடலாக ஆனால் ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை இப்போது கிடையாது எல்லோரும் சமம் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் மீனவ நண்பன் படத்தில்

"பட்டத்து ராஜாவும் பட்டாள சிப்பாயும்

ஒன்றான காலமிது

என் மாமனாரே வழி மாறினாலே

உங்க மரியாதை என்னாவது"

என்ற பாடல் காட்சி அமைக்கப்பட்டது. இவ்விரண்டு பாடல்களுக்கும் இடையிலான வேறுபாடு என்னவென்றால் படகோட்டியில் பணக்காரனுக்கு முன்பு ஏழையின் உறுதிப்பாடு நொறுங்கிவிடும் என்ற இயலாமை நிலை சுட்டப்பட்டிருக்க, மீனவ நண்பன் படத்தில் வரும் பாடல் முடியும் என்ற உறுதியான நம்பிக்கையை புலப்படுத்துகிறது. இரக்கமற்ற பணக்காரர் முன்பு அவரையே கேலி செய்யும் பாடலாக அமைந்துள்ளது.. இதுவே காங்கிரஸ் மற்றும் திமுக என்ற எதிர்க்கட்சிகள் ஆட்சியின்போது எம்.ஜி.ஆர். நடித்த பாடல் காட்சிகளில் வேறுபாடு என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

எம்.ஜி.ஆர். தன் படங்களில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை எதிர்த்தார். ஆனால் அதிமுக தொடங்கிய பிறகு திமுக ஆட்சியை மிகக் கடுமையாக எதிர்த்தார். காரணம் காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் போது அவர் திமுகவின் உறுப்பினராக இருந்தார். ஆனால் திமுக ஆட்சியை எதிர்க்கும் போது அவர் அண்ணா திமுகவின் தலைவர்.



பணக்காரப் பெண்ணை திருமணம் செய்துகொண்டு அவளுடைய வீட்டில் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டு வந்திருக்கும்போது தன்னுடைய மாமனாரின் அட்டகாசத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் அவரைப் பார்த்து எதிர்கேள்வி கேட்பதாக முதல் காட்சியில்

“மாமா உங்க முன்னேற்றம் எங்கள்

கண்ணீரில் தான் வந்தது

அட ராமா உண்மை சொன்னாலே கோபம்

என் மேலே ஏன் வந்தது?”

என்று கேட்கிறார். அடுத்து தனக்கிருக்கும் மக்கள் செல்வாக்கை பற்றி பெருமையாக எடுத்துரைக்கிறார். பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்று நினைப்பது தவறு அன்பான உள்ளங்களின் ஆதரவால் மட்டுமே உயர் நிலையை அடைய முடியும் என்ற வேறுபாட்டை இவ்வரிகள் உணர்த்துகின்றனர்.

“நீ கொண்ட நாணயம் பூட்டிய வீட்டுக்குள்

சிறையாய் இருக்குதய்யா

நான் கொண்ட நாணயம் நாட்டிலும் வீட்டிலும்

நிறைவாய் இருக்குதையா”

இப்படம் எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு திரைக்கு வந்ததால் முன்பு கோட்டையில் ஆட்சி செய்த திமுகவின் அதிகாரம் மக்களின் அன்புக்கு முன்னாள் தூள் தூளாகிப் போனதை சுட்டிக்காட்டுகின்றன.

“கோட்டை கட்டி கொண்டாட்டம் போட்ட

கூட்டங்கள் என்னானது

பல ஓட்டை கண்டு தண்ணீரில் மூழ்கும்

ஓடங்கள் போலானது”

திமுகவின் வளர்ச்சிக்கு உதவிய எம்.ஜி.ஆரை கருணாநிதி கட்சியைவிட்டு வெளியேற்றிய நன்றி கெட்ட செயலை சுட்டிக்காட்டுவதாக

“ஏற்றிய ஏணியை தூற்றிய பேருக்கு

இதுதான் பாடமையா

நானென்ன சொல்வது நாட்டினில் நடப்பது

கண்கொண்டு பாருமையா”

என்ற வரிகள் அமைந்தன.

இப்பாடல் வரிகள் அதிகாரமிக்க திமுகவினர் செய்யும் அராஜகம் ஊழலும், அட்டூழியங்களும்



ஆட்சியில் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படும் என்ற உறுதியை மக்களுக்கு அளிக்கும் வகையில் ஒரு தேர்தல் பிரச்சார பாடலாகவே அமைந்தது.

படகோட்டி படத்தில் இடம்பெற்ற ‘‘கொடுத்ததெல்லாம் கொடுத்தான்’’ பாடல் வேறு ஒரு படத்துக்கு எழுதப்பட்டது என்றும் எம்.ஜி.ஆர். பாட்டு மிகச்சிறப்பாக இருப்பதை கண்டு தன்னுடைய இந்த படத்துக்கு பயன்படுத்திக் கொண்டார் என்றும் சொல்வதுண்டு. இப்பாட்டு எழுதப்பட்ட சூழ்நிலையை வாலி ஒரு பேட்டியில் விவரித்தார். படப்பிடிப்பு நிலையத்தில் நண்பகல் உணவின்போது எம்.ஜி.ஆர். வாலியை அழைத்து அவருக்கு பாயாசம் கொடுத்தார். அதனைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்து ஓரிடத்தில் சாவகாசமாக உட்கார்ந்தபடி வாலி அந்த பாயாசத்தை பருகிக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாகச் சென்ற ஒரு பணியாளரைப் பார்த்து வாலி மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் ‘எனக்கு எம்.ஜி.ஆர். பால்பாயாசம் கொடுத்தார்’ என்று கூறினார், அப்பணியாளர் ‘உங்களுக்கு மட்டுமா கொடுத்தார் அவர் ஊருக்கே குடுத்தார்’ என்று சொல்லி விட்டு போய்விட்டார். பணியாளர் சொன்ன இந்த வாக்கியத்தில் இருந்துதான்,

“கொடுத்ததெல்லாம் கொடுத்தான்

அவன் யாருக்காகக் கொடுத்தான்

ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை

ஊருக்காகக் கொடுத்தான்”

என்ற பல்லவி பிறந்தது என்று வாலி தெரிவித்தார். எம்.ஜி.ஆருக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்



எழுதப்பட்ட பாடல்களில் கம்யுனிசச் சிந்தனைகள் அதிகம் இடம் பெறும். திமுக ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட பாடல்களில் இவை சற்று குறைவாக இருக்கும்.

காதல் பாடல்கள்

படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரண்டு படங்களிலும் காதல் பாடல்கள் இடம் பெற்றன. படகோட்டி படத்தில் "தொட்டால் பூ மலரும்" என்ற பாட்டும், "நான் ஒரு குழந்தை நீ ஒரு குழந்தை" என்ற பாட்டும் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் தனித்து சந்தித்து பாடும் பாடல்களாக அமைந்தன. மீனவ நண்பன் படத்தில்

"கண்ணழகு சிங்காரிக்கு விழி இரண்டில் கண்ணி வைத்தேன்

காதலுக்கு சீதனமாய் இதயத்தையே கொண்டு வந்தேன்"

என்ற பாட்டும் லதாவின் கனவில் ராஜா ராணி வேடத்தில் பாடுவதாக அமைந்த “தங்கத்தில் முகம் எடுத்து சந்தனத்தில் உடலெடுத்து” என்ற பாட்டும் காதல் பாடல்களாக அமைந்தன. நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட காலமென்பதால் மீனவ நண்பன் படத்தில் வரும் காதல் பாடல்களில் காட்சிகளில் காதலரிடையே நெருக்கம் காட்டப்படவில்லை. கண்ணழகு சிங்காரிக்கு, விழி இரண்டில் கண்ணி வைத்தேன் என்ற பாடலில் லதா மீன்பிடிக்கச் சென்ற எம்.ஜி.ஆருக்கு உணவு கொண்டு வருவதாக காட்சி அமைக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே உரிமைக்குரல் படத்தில் கழனியில் உழுதுகொண்டிருக்கும் எம்.ஜி.ஆருக்கு சாப்பாடு



கொண்டு போகும் லதா பாடுவதாக அமைந்த

"கல்யாண வளையோசை கொண்டு

காற்றே நீ முன்னாடி செல்லு

பின்னாடி நான் வாரேன் என்று

கண்ணாளன் காதோடு சொல்லு"

பெண்களிடையே மிகுந்த வரவேற்ப்பை பெற்றிருந்தது. அதுபோல மீனவ நண்பன் படத்திலும் கடலில் மீண் பிடித்துக்கொண்டிருக்கும் எம்.ஜி.ஆருக்கு லதா உணவு கொண்டு வரும் இப்பாடல் இடம் பெற்றது. இவை இரண்டும் பெண்களை மிகவும் கவர்ந்தன. வாக்குகளையும் எம்.ஜி.ஆருக்கு அள்ளித் தந்தன.

மீனவ நண்பன் படத்தில் வரும் கனவு பாட்டுக்கு ஒரு வரலாறு உண்டு. இப்பாடல் முதலில் படத்தில் இடம் பெறவில்லை, படத்தில் ஒரு கனவு பாட்டு வைக்கும் திட்டமும் இயக்குனருக்கு இல்லை. படத்தின் அனைத்து பாடல்களும் எடுத்து முடிக்கப்பட்ட நிலையில் ஒரு நாள் கவிஞர் முத்துலிங்கம் எம்.ஜி.ஆரை வந்து பார்த்தார். மீனவ நண்பன் படப்பிடிப்பில் இருந்ததனால் இந்த படத்தில் நீங்கள் எந்த பாட்டு எழுதி இருக்கிறீர்கள் என்று கேட்டார், படத்தில் நான் எதுவும் எழுதவில்லை என்றார். உடனே ஸ்ரீதரை அழைத்து இவருக்கு ஒரு பாடல் எழுத வாய்ப்பு கொடுங்கள் என்றார். எல்லா பாடல் காட்சிகளும் எடுத்து முடிந்துவிட்டன, பாட்டு வைக்கக் கூடிய சூழ்நிலை எதுவும் கதையில் இல்லையே என்றார் ஸ்ரீதர். அதற்கு எம்.ஜி.ஆர். கனவுப் பாட்டுக்கு என்ன சிச்சுவேஷன்?

லதா கனவு காண்பதாக ஒரு காட்சியை வையுங்கள் என்றார். முத்துலிங்கம் அவர்களிடம் நீங்கள் ஒரு பாட்டு எழுதிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டார். இந்த பாட்டு எழுதுவதற்கு 5000 ரூபாய் பணமும் தரப்பட்டது என முத்துலிங்கம் தன் உரைகளிலும் தெரிவித்துள்ளார். அவ்வாறு எழுதப்பட்ட பாடல் தான்

“தங்கத்தில் முகமெடுத்து

சந்தனத்தில் உடலெடுத்து

மங்கை என்று வந்திருக்கும் மலரோ

நீ மாலை நேர பொன் மஞ்சள் நிலவோ”

எனத் தொடங்கிய பாடல். இலக்கிய நயம் செறிந்த பாடல். இப்பாடல் லதா எம்.ஜி.ஆரிடம் தன்னுடைய பிறந்த நாளுக்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அழைப்பிதழ் கொடுத்துவிட்டு வந்த பிறகு எம்.ஜி.ஆரைப் பற்றி கனவு காண்பதாக எடுக்கப்பட்ட காட்சியில்



இடம்பெற்றது. பாடல் காட்சி விரைவாக எடுக்கப்பட்டது.

ஏன் தொடக் கூடாதா?

படகோட்டி படத்தில் இடம்பெற்ற இரண்டு காதல் பாடல்களும் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக “தொட்டால் பூ மலரும்” என்ற பாடல் இளைஞர்கள் இடையே மிகுந்த வரவேற்பைப் பெற்ற பாடலாக அமைந்தது. இப்பாடல் எடுக்கப்பட்ட காலகட்டத்தில் இளம் ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் தொட்டுப் பேச கூடாது என்ற கட்டுப்பாடு நிலவியதால் சரோஜாதேவியை பார்க்க வந்த எம்.ஜி.ஆர். ஆவலோடு வந்து தொட முயலும் பொது சரோஜாதேவி விளகிகொல்வார். உடனே எம்.ஜி.ஆர். வேதனை நிரம்பிய முகத்துடன், ‘ஏன் தொடக்கூடாதா’ என்று கேட்பார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் சரோஜாதேவி தொட்டால் பூ மலரும், தொடாமல் நான் மலர்ந்தேன் எனப் இப்பாடலைப் பாடத் தொடங்குவார்.



ஏன் தொடக்கூடாதா என்ற வசனம் இக்காட்சிக்கு மகுடமாக அமைந்தது. இப்பாட்டின் பல்லவி பாடப்படும் போது எவ்விதப் பின்னணி இசையும் இருக்காது ஒருவரை ஒருவர் தொடும் காட்சி தட்டும் காட்சியாக அமைக்கப்பட்டு அந்த ஓசை மட்டுமே இடம்பெற்றது. பாடல் முடியும்போது சரோஜாதேவியும் எம் ஜிஆரும் மாறி மாறி தட்டினாலும் கடைசியில் சரோஜாதேவியைத் தட்ட விடாமல் எம்.ஜி.ஆர். அவர் கையைப் பிடித்துக் கொள்வதாக பாடல் முடிந்தது. . இப்பாடல் காட்சி கேரளாவில் உள்ள ஆலம்புழா அணைக்கட்டில் எடுக்கப்பட்டது. இப்பாடல் முழுக்க வெளிப்புறப் படப்பிடிப்பில் எடுக்கப்பட்டதாகும்.

பவளக்கொடியே வா

இரண்டு குப்பங்களும் ஒன்று சேர வேண்டும் என்ற நோக்கத்தில் எம்.ஜி.ஆர். தாத்தா வேடம் போட்டு சுறா மீன் குப்பத்தின் தலைவர் வீட்டில் இருப்பார். அங்கு தன் காதலி சரோஜாதேவியுடன் பேச முடியாமல் முதியவர் வேடம் தடையாக இருக்கின்றது என்று எம்.ஜி.ஆர். கவலைப்படுவார். மாணிக்கத்தைக் காணாமல் தவிக்கும் சரோஜாதேவி தூங்காமல் விழித்திருப்பது கண்டு அவரிடம் மாணிக்கம் தான் முதியவர் வேடம் போட்டு இந்த வீட்டில் தங்கி இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவதற்காக வீட்டுக்கு பின்புறம் உள்ள இடத்திற்கு வந்து

“நான் ஒரு குழந்தை

நீ ஒரு குழந்தை

ஒருவர் மடியிலே ஒருவரடி



நாள் ஒரு மேனி பொழுதொரு வண்ணம்

ஒருவர் மனதிலே ஒருவரடி"

என்ற பாடலைப் பாடுவார். முதியோர் வேடம் கலைந்து அழகான தோற்றத்துடன் எம்.ஜி.ஆரைப் பார்த்த சரோஜாதேவி அகமகிழ்ந்து போவார். இப்பாடல் எம்.ஜி.ஆர். மட்டும் பாடுவதாக இருக்கும்

"பவழக் கொடியே வா

சிந்தாமணியே வா

மணிமேகலையே வா

மங்கம்மாவே வா"

என்ற வரிகளில் உள்ள எளிமையும் பொருண்மையும் படம் பார்க்கும் பெண்களின் உள்ளத்தைக் கவர்ந்தன.

"நேற்றொரு தோற்றம் இன்றொரு மாற்றம்

பார்த்தால் பார்வைக்கு தெரியாது

தொடங்கிய பாதையில் தொடர்ந்து வராமல்

தூரத்தில் நின்றால் புரியாது"

என்ற வரிகள் அழகான இளைஞனாக இருந்த எம்.ஜி.ஆர். முதியவராக மாறுவேடம் போட்டு இலட்சியப் பாதையில் தொடர்ந்து செல்வதை சரோஜாதேவிக்கு உணர்த்துவதாக அமைந்தன. காதல் பாட்டிலும் தனது இலட்சியத்தை எம்.ஜி.ஆர். மறக்கவில்லை. பாடல் முடிவில் இக்கருத்தை சரோஜாதேவியிடம் வசனமாகவும் எம்.ஜி.ஆர். எடுத்துரைப்பார். இப்பாடலின் படப்பிடிப்பு நிலையத்துக்குள் எடுக்கப்பட்டதால் நல்ல வெளிச்சத்தில் சிறந்த ஒளி அமைப்பில் வண்ணக் காட்சியாக பல வண்ணங்கள் நிறைந்த வண்ணக்கோலம் ஆக எடுக்கப்பட்டிருக்கும்.

கதாநாயகியின் தனிப்பாடல்

படகோட்டி மீனவ நண்பன் ஆகிய இரு படங்களிலும் கதாநாயகிக்கு என்று தனிப்பாடல்கள் உண்டு. படகோட்டி எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் சந்தித்து பிரிந்த பின்பு ஒருவரை ஒருவர் பார்க்க விரும்பி அடுத்தவர் இருப்பிடத்தை தேடி வரும் போது பாடும் பாடலாக

"என்னை எடுத்துத் தன்னைக் கொடுத்து

போனவன் போனாண்டி

தன்னைக் கொடுத்து என்னை அடையவந்தாலும்

வருவாண்டி.. ஓ.ஓ.ஓ.போனவன் போனாண்டி…

இந்த வயதுக்கு ஏக்கத்தை வைத்து

போனவன் போனாண்டி....

போனவன் போனாண்டி

ஏக்கத்தைத் தீர்க்க ஏனென்று கேட்க

வந்தாலும் வருவாண்டி.. ஓஓஓ...

வந்தாலும் வருவாண்டி..

ஹோய் ஹோய் ஹோய்

போனவன் போனாண்டி...

நெஞ்சை எடுத்து நெருப்பினில் வைத்து

போனவன் போனாண்டி

நீரை எடுத்து நெருப்பை அணைக்க

வந்தாலும் வருவாண்டி.. ஓ

வந்தாலும் வருவாண்டி.. ஹோய் ஹோய் ஹோய்

போனவன் போனாண்டி...

ஆசை மனதுக்கு வாசலை வைத்து

போனவன் போனாண்டி

போனவன் போனாண்டி`

வாசலைத் தேடி வாழ்த்துக்கள் பாடி

வந்தாலும் வருவாண்டி..

ஓவந்தாலும் வருவாண்டி..

ஹோய் ஹோய் ஹோய்

போனவன் போனாண்டி...”



என்ற ஏக்கத்தோடும் எதிர்பார்ப்போடும் சரோஜாதேவி பாடிக் கொண்டு வருவார். கடற்கரையில் எடுக்கப்பட்ட இப்பாடல் மீனவர்கள் கடலுக்கு செல்வர். அவர்களை அனுப்பிவிட்டு அவர்களின் மனைவிமார்கள் திரும்பிச் சென்று கொண்டிருப்பார்கள். கடலில் செல்லும் படகுகளைப் பார்த்தபடி சரோஜாதேவி மட்டும் தனித்து நின்று சோகக் குரலில் பாடிக் கொண்டிருப்பதாக இக்காட்சி நெய்தல் திணையின் கருப்பொருளான இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்பதற்குரிய எடுத்துக்காட்டுப் பாடலாக அமைந்திருந்தது.

எம்.ஜி.ஆருக்கு வாத்தியாரான லதா

மீனவ நண்பன் படத்தில் வேறு யாரும் பாட இயலாத வகையில் எடுத்த எடுப்பிலேயே வாணி ஜெயராமன் உச்சஸ்தாயியில் தொடங்கிப் பாடிய

“பொங்கும் கடலோசை

தண்ணீரிலே ஓடங்களை தாலாட்டவே

கொஞ்சும் தமிழோசை

பச்சைக்கிளி ஒரு தோணியில்

பக்கம் வரும் அதிகாலையில்

மன்னவன் ஓடம் பார்த்ததோ

மயக்கம் கொண்டு ஆடுதோ ?

சாதனை செய்கையில் சோதனை தோன்றினால்

மயங்குவதேனோ ??

வெள்ளி அலை வந்து மோதலாம்

செல்லும் வழி திசை மாறலாம்

பொன்மலைக்காற்று வீசினால்



படகு தாளம் போடலாம்

நீரலை மேடையில்

மீனவன் நாடகம் நடிப்பது மேனோ?”

என்ற பாடல் தனிப் பாடலாக லதா பாடுவதாக இடம்பெற்றது. இப்பாடலில் எம்.ஜி.ஆர். இருக்கும் படகோடு தன் படகையும் இணைத்து கட்டியவர் எம்.ஜி.ஆரை பார்த்து “சொல்லித் தர ஒரு வாத்தியார் , என்னைவிட இங்கு வேறு யார்” என்று கேட்டுப் பாடும்போது திரையரங்கில் ரசிகர்கள் ஆரவாரித்து கை தட்டுவார்கள். எம்.ஜி.ஆரை அனைவரும் வாத்தியார் என்று அழைக்கும் போது ‘இங்கே பாடம் சொல்லித் தரும் வாத்தியார் என்னைத் தவிர வேறு யார்’ என்று லதா கேட்டது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த ஆரவாரத்தை ஏற்படுத்தியது. இது காதல் பாடலாக இருந்ததனால் வாத்தியாருக்கு வாத்தியாராக லதாவைப் பார்த்து ரசித்தனர்.

கவர்ச்சிப் பாடல்

படகோட்டி படத்தில் சரோஜாதேவிக்கு ஒரு கவர்ச்சி நடனப் பாடலும், எம்.ஜி.ஆர். வளையல் வியாபாரியாக மாறு வேடமிட்டு வந்து பாடும் பாடல்களும் இடம்பெற்றன. இது போன்ற பாடல்கள் மீனவ நண்பன் படத்தில் இடம்பெறவில்லை. படகோட்டியில் நீலமேகமாக நடிக்கும் நம்பியாரின் துணைவியாக ஜெயந்தி நடித்திருப்பார். அவரை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் நடனம் ஆடும் ஒரு பாடல் காட்சி இடம்பெற்றது. அத்துடன் நம்பியாருக்கு சரோஜாதேவி மீதிருக்கும் மோகத்தையும் உணர்த்தும் வகையில் இப்பாடல் காட்சி அமைந்தது.



“அழகு ஒரு ராகம் ஆசை ஒரு தாளம்” என்று பாடி ஆடும் போது ஜெயந்தியைப் பார்க்க நம்பியாருக்கு சரோஜாதேவி போல தோன்றும். எனவே சரோஜாதேவி நீண்ட பாவாடை சட்டை அணிந்த கவர்ச்சி உடையில் தன் முன்னே ஆடுவதாக நம்பியார் கற்பனை செய்வதாக இப்பாடல் காட்சி இடம்பெற்றது. ஜெயந்தி சேலை கட்டிய தோற்றத்தில் ஆடுவார். சரோஜாதேவிக்கு இந்தப் பாடல் காட்சியில் மட்டும் சேலைக்கு பதிலாக நீண்ட பாவாடை சட்டை வழங்கப்பட்டிருக்கும

மாறுவேடப் பாட்டு

சினிமாவில் மாறுவேடம் போடுவது எம்.ஜி.ஆருக்கு மிகவும் விருப்பமானது. வேடப் பொருத்தம் கன கச்சிதமாக இருக்கும்படி அக்கறை எடுத்துக்கொள்வார். படகோட்டியில் வளையல் செட்டியாக வருவார். எம்.ஜி.ஆர். தலையில் கொண்டையும் நெற்றியில் பெரிய நாமமும்,

முகத்தில் பெரிய மீசையும் பெரிய தொந்தியும் வைத்துக்கொண்டு வளையல் பெட்டியை சுமந்து கொண்டு நிறைய கண்ணாடி வளையல்களை சரமாக கோர்த்து கைகளில் மாட்டியபடி முதலாளி நீல மேகத்தின் பங்களாவுக்கு வருவார். அங்கு மணப்பெண்ணாக சிறை வைக்கப்பட்டிருக்கும் சரோஜாதேவியைப் பார்த்து தன வருகையை உறுதி செய்வார். சிக்கலில் இருந்து மீட்டு காப்பாற்றி அழைத்துச்சென்று விடுவார் என்ற நம்பிக்கை ஊட்டும் வகையில் இப்பாடல் காட்சி இடம்பெற்றது. இப்பாடல் அனைத்து தரப்பினரையும் உற்சாகப்படுத்திய அழகான பாடலாகும்.

"கல்யாணப் பொண்ணு கண்ணான கண்ணு

கொண்டாடி வரும் வளையல் - அம்மா

பூவோடு வருமே பொட்டோடு வருமே

சிங்காரத் தங்க வளையல்



எனத்தொடங்கும் இப்பாடலில்

> **"அத்தானின் காதல் முத்தாமல் இருந்தால்**
>
> **பித்தாக செய்யும் வளையல்"**

என்ற வரிகள் இளைஞர்களை கவர்ந்தன.

> **"சித்தானை உடம்பு வத்தாமல் இருந்தால்**
>
> **ஒத்தாசை செய்யும் வளையல்"**

என்ற வரிகள் வயதானவர்களைப் பற்றியும் இடம்பெற்றன. மாமியார் மருமகள் இக்காட்சியில் இடம்பெறுவதாகக் காட்டப்படும்

> **"பொண்டாட்டி புருஷன் ரெண்டாக இருந்தால்**
>
> **மூனாகச் செய்யும் வளையல்"**

என்ற வரிகள் கிராமத்து மக்களின் ஆதரவைப் பெற்றன.


நிறைவு

படகோட்டி, மீனவ நண்பன் ஆகிய இரண்டு படங்களிலும் ஜனரஞ்சகமான பாடல்களாக இருந்து மக்களைக் கவர்ந்தன. மீனவ நண்பனை விட படகோட்டி பாடல்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. தனிப்பாடல் காதல் பாடல் என அனைத்து வகையிலும் ரசிகர்களை அதிகம் கவர்ந்தவை படகோட்டி பாடல்களாகும். மேலும் இப்படம் வண்ணப்படம் என்பதாலும் மக்கள் ஆவலோடு சென்று பார்த்தனர். இப்படத்தை மதுரை மீனாட்சி திரையரங்கில் பார்த்துவிட்டு திரும்பிய ஒரு ரசிகையிடம் எம்.ஜி.ஆர். படங்கள் பற்றி கேட்ட போது, அவர் குடும்பமே எம்.ஜி.ஆர். ரசிகர்கள்

என்றார். அப்பா, அம்மா கணவர் சகோதரர், மாமியார் மாமனார் என அனைவருமே எம்.ஜி.ஆர். ரசிகர்கள் என்றார். நேரில் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டதற்கு ' பரவசத்துடன் பெரிய சிரிப்பு சிரித்தார். முகத்தில் நாணம் பொங்க 'அவரை ஐந்து நிமிடம் கட்டிப்பிடித்தபடி நின்றிருக்கிறேன்'. பின்பு வீட்டுக்கு வந்ததும் இரண்டு வாரங்கள் வரை பிரமை பிடித்தது போல இருந்தாராம். அவருக்கு அன்று வரை ஒரு கவலை. 'எம்.ஜி.ஆரை அப்படியே தூக்கி தட்டாமாலை சுற்றாமல் போனோமே' என்றார். அவர் படகோட்டியை காதல் காட்சிகளுக்காகவும் எம்.ஜி.ஆரின் அழகான தோற்றத்துக்காகவும் திரும்பத் திரும்பப் பார்ப்பதாக சொன்னார்.



இப்பேர்ப்பட்ட இரசிகைகள் இருக்கும் வரையில் இன்னும் எத்தனை மாமாங்கம் ஆனாலும் எம்.ஜி.ஆர். படங்கள் திரையரங்கில் வெற்றி வசூல் சாதனை நிகழ்த்திக்கொண்டு இருக்கும் என்பதில் ஐயமில்லை.



முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்

